بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 26

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - துல்ஹஜ் 10 ★ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - இஹ்ஸான் 29 ★ 29 ஜூன் 2023

## அல்லாஹ்வின் கட்டளை

وَاَوۡفُوا الۡکَیۡلَ اِذَا کِلۡتُمۡ وَزِنُوۡا بِالۡقِسۡطَاسِ الۡمُسۡتَقِیۡمِ ؕ ذٰلِکَ خَیۡرٌ وَّاَحۡسَنُ تَاۡوِیۡلًا ﴿۳۶﴾

**பொருள் :**
நீங்கள் அளந்து கொடுக்கும்போது, அளவை முழுமையாகக் கொடுங்கள். (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்த வரை மிகச் சிறந்ததுமாகும்.
(பனீ இஸ்ராயீல் : 36)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## உதவுவதற்கான அசல் அதிகாரம் அல்லாஹ்விற்கே உரியது ஆகும்
## இந்த உரிமை எந்த ஒரு படைப்பினத்திற்கும் வானத்திலும் இல்லை. பூமியிலும் கிடையாது
## மனிதனின் நேசத்திற்குரியவனாகவும், இறைவனாகவும், நோக்கமாகவும் அல்லாஹ் மட்டுமே இருக்க வேண்டும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### அல்லாஹ்விடம் மட்டுமே உதவி வேண்டப்பட வேண்டும்

உதவி வேண்டுவது தொடர்பாக இந்த விஷயத்தை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது உதவுவதற்கான அசல் உரிமை அல்லாஹ்விற்கே உள்ளது. மேலும், இதனையே திருக்குர்ஆன் வலியுறுத்தியுள்ளது. ஆக, اِیَّاکَ نَعۡبُدُ وَاِیَّاکَ نَسۡتَعِیۡنُ ؕ என்று அல்லாஹ் கூறியுள்ளான். ரப், ரஹ்மான், ரஹீம், மாலிகி யவ்மித்தீன் போன்ற பண்புகளை முதலில் வெளிப்படுத்தியுள்ளான். பின்னர்,

اِیَّاکَ نَعۡبُدُ وَاِیَّاکَ نَسۡتَعِیۡنُ ؕ

என்று கற்றுத் தந்துள்ளான். அதாவது உன்னையே வணங்குகின்றோம். மேலும் உதவியும் உன்னிடமே வேண்டுகின்றோம். இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், உதவி செய்வதற்கான அசல் அதிகாரம் அல்லாஹ்விற்கு மட்டுமே உள்ளது. ஒரு மனிதனுக்கோ, பறவைக்கோ, விலங்கிற்கோ சுருக்கமாக, எந்த ஒரு படைப்பினத்திற்கும் இந்த அதிகாரம் வானத்திலும் இல்லை. பூமியிலும் இல்லை. ஆயினும் இரண்டாவது படித்தரத்தில் நிழல் வடிவில் இந்த உரிமை இறை அடியார்கள் மற்றும் இறை நேசர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு விஷயத்தை நாம் நம் தரப்பிலிருந்து (நாமாக) உருவாக்கிக் கொள்ளக் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் கூற்று மற்றும் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலுக்குள் இருக்க வேண்டும். இதன் பெயரே ஸிராத்தே முஸ்தகீம் ஆகும். மேலும் இந்த விஷயத்தை

لَاۤ اِلٰہَ اِلَّا اللّٰہُ مُحَمَّدٌ رَّسُوۡلُ اللّٰہِ

என்பதிலிருந்தும் மிகச் சிறப்பாக புரிந்து கொள்ள முடியும். இதன் முதல் பகுதியிலிருந்து மனிதன் (தனது) நேசனாகவும், இறைவனாகவும், நோக்கமாகவும் அல்லாஹ்வை மட்டுமே ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பது தெரிய வருகின்றது.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 462, காதியான் பதிப்பு -2003)

## பிறரைக் குறித்து செவிமடுப்பதற்கு அதிகாரமற்ற ஒரு விஷயத்தை ஒரு(வரின்) காது செவிமடுத்தால் அது குறித்து விசாரிக்கப்படும்
## எதனைப் பார்ப்பதற்கு ஒரு கண்ணிற்கு உரிமை இல்லையோ அதனை அந்தக் கண் பார்த்தால் பின்னர் அது குறித்தும் அதனிடம் கேள்விக் கேட்கப்படும்
## எந்த எண்ணங்களை கொள்வதற்கு உரிமை இல்லையோ அவற்றை ஓர் உள்ளம் கொண்டிருந்தால் பின்னர் அது குறித்தும் அதனிடம் கேள்வி கேட்கப்படும்

وَلَا تَقۡفُ مَا لَیۡسَ لَکَ بِہٖ عِلۡمٌ ؕ اِنَّ السَّمۡعَ وَالۡبَصَرَ وَالۡفُؤَادَ کُلُّ اُولٰٓئِکَ کَانَ عَنۡہُ مَسۡـُٔوۡلًا ﴿۳۷﴾ (17:37)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்: எந்த ஒரு புதிய கல்வியையும் கற்காதீர்கள்; புதுப்புது ஆராய்ச்சிகளை செய்யாதீர்கள் என்பது இதன் பொருள் அல்ல. மாறாக, தப்பெண்ணம் கொள்ளாதீர்கள். மேலும் ஆய்வு செய்யாமல் பிறர் மீது பழி சுமத்தாதீர்கள் என்பது இதன் பொருள் ஆகும். ஆக, இதன் பிறகு எந்தக் காரணிகளால் தவறான எண்ணங்கள் தோன்றுகின்றனவோ அவை எடுத்துரைக்கப்படுகின்றன. அதாவது காது, கண், உள்ளம். சில முறை மனிதன் பிறரைக் குறித்து விஷயத்தைக் கேட்டுவிட்டு விஷயத்தை தீர்மானித்து விடுகின்றான். மேலும், ஆய்வு செய்யாமலேயே பகைமை கொள்ள ஆரம்பித்துவிடுகின்றான். சில முறை மனிதன் ஒரு சம்பவத்தைப் பார்க்கின்றான். மேலும், அதிலிருந்து தவறான பொருளைக் புரிந்து கொள்கின்றான். எதனைப் பார்த்து அவன் தீமையாகக் கருதினானோ அதனை செய்வதற்கு ஏதாவது ஆகுமான காரணம் இருப்பதற்கு சாத்தியம் உள்ளதா? என்று ஆய்வு செய்வதில்லை. மேலும், சிலர் சுயமே தங்களது உள்ளத்தில் ஒரு விஷயத்தை உருவாக்கிக் கொள்கின்றனர். இந்த அனைத்து விஷயங்களிலிருந்தும் அல்லாஹ் தடுத்துள்ளான். மேலும், தவறான எண்ணங்களுக்குப் பின்னால் செல்லக் கூடாது என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்

## நபிமொழி

(2388) ஹஸ்ரத் அபூதர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். அன்னார் (ஸல்) உஹது மலையைக் கண்டபோது, இது (முழுவதும்) எனக்காக தங்கம் ஆக்கப்பட்டுவிட்டாலும் கூட மூன்று நாட்களுக்கு மேல் அவற்றிலிருந்து ஒரு தினார் என்னிடம் எஞ்சியிருப்பதைக் கூட நான் விரும்ப மாட்டேன். கடனை திருப்பி செலுத்துவதற்காக வைத்திருக்கும் தினாரைத் தவிர. பின்னர் அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஒருவர் எந்த அளவிற்கு செல்வந்தராக இருக்கின்றாரோ அவர் அதே அளவிற்கு தேவையுடையவராக இருக்கின்றார். எவர் இன்ன இன்ன வகையில் செலவு செய்கின்றாரோ அவரைத் தவிர اِنَّ الۡاَکۡثَرِیۡنَ ھُمُ الۡاَقَلُّوۡنَ

ஹஸ்ரத் ஸய்யது ஜைனுலாபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் கூறுகின்றார்கள்: இந்த வாக்கியத்தின் பொருள் என்னவென்றால், பணத்தை ஒன்று கூட்டுவதில் செல்வச் செழிப்பு இல்லை. இன்னும் கூறப்போனால், பெரும்பாலான செல்வந்தர்கள் நல்லொழுக்கத்திலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருப்பதன் காரணத்தால் வறியவர்களாக இருக்கின்றனர். செல்வச் செழிப்பு என்பது செல்வத்தை ஒன்று கூட்டுவதில் இல்லை. மாறாக, வலமும், இடமும் செலவு செய்வதில் உள்ளது. அதாவது, மார்க்க மற்றும் உலகத் தேவைகளுக்காக செலவு செய்வதன் மூலமாக செல்வத்தின் நோக்கம் முழுமையடைகின்றது. எவர் ஒருவர் பணத்தை ஒன்றுகூட்டி பின்னர் அதனை கடமைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்யவில்லையோ அவரே மிகப் பெரும் ஏழை ஆவார். ஆனால், எந்த நபர் தனது செல்வத்தின் மூலமாக கடமைகளை நிறைவேற்றினாரோ அவரே உண்மையில் தேவையற்றவர் ஆவார். அதாவது அவர் செல்வத்தின் அசல் நோக்கத்தை அடைந்து விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செல்வத்தைக் குறித்த இந்த பார்வை மிகவும் உயர்வான ஞானம் நிறைந்த பார்வையாகும். (ஸஹீஹ் அல்புகாரி, தொகுதி 4, கிதாப் அல்இஸ்திகராஸ், காதியான் பதிப்பு - 2008 ஆம் ஆண்டு)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**உண்மையான இஸ்லாமிய கிலாஃபத்திற்கான உதவிகளை வெளிப்படுத்தக்கூடிய ஈமானை வலுவூட்டும் சில சம்பவங்களின் குறிப்புகள்**

**அந்த இரண்டாம் வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும், நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால், நான் சென்றுவிட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும்**

**நான் இறைவன் தரப்பிலிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். மேலும் எனக்குப் பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள்-ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்**

**அல்லாஹ்வின் செயல் சாட்சியம் உங்களுடன் இருக்கின்றது என்று கூறும் நிர்பந்தத்தில் எதிரியும் இருக்கின்றார்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 26 மே 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **26ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அன்னார் இவ்வுலகிலிருந்து விடை பெறும் நேரம் நெருங்கிவிட்டது என்ற செய்தியைத் தெரிவித்த போது அன்னார் (அலை) ஜமாஅத்தைப் பார்த்து கூறினார்கள்: அல்லாஹ் இரு விதமான வல்லமையை வெளிப்படுத்துகின்றான். முதலாவதாக, நபிமார்களின் கைகளாலேயே தனது வல்லமையின் கரத்தைக் காட்டுகின்றான்.

இரண்டாவதாக, நபியின் மரணத்திற்குப் பிறகு துன்பங்களை எதிர்கொள்ளும் நிலை உருவாகிறது. எதிரிகள் வலுப் பெற்று இப்பொழுது பணி சீர்குலைந்துவிட்டது என கருதுகின்றனர். இனி இந்த ஜமாஅத் அழிந்துவிடும் என உறுதியாக நம்புகின்றனர். ஜமாஅத் மக்களும் கூட கலக்கத்தில் மூழ்கிவிடுகின்றனர். அவர்களுடைய இடுப்புகள் முறிந்து விடுகின்றன. பேறிழந்த பலர் மார்க்கத்தை விட்டு விலகும் வழியை மேற்கொண்டு விடுகின்றனர். அப்போது இறைவன் இரண்டாவது முறையாக தனது மகத்தான வல்லமையை வெளிப்படுத்துகின்றான். வீழ்ந்து கொண்டிருக்கும் ஜமாஅத்தை சீர்தூக்கி விடுகின்றான்.

எனவே, கடைசி வரை பொறுமையுடன் இருப்பவர் இறைவனின் இந்த அற்புதத்தைக் காண்கின்றார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் இவ்வாறே நடந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் ஒரு அகால மரணமாக கருதப்பட்டது. காட்டுவாசிகளான பல அறிவீனர்கள் மார்க்கத்தை விட்டு வெளியேறி விட்டார்கள். நபித்தோழர்களும் துக்கம் தாளாமல் பித்து பிடித்தவர்களைப் போன்று ஆகிவிட்டார்கள்.

அப்போது இறைவன் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களை நியமித்து, மீண்டும் தனது வல்லமையின் முன்மாதிரியைக் காட்டினான். இஸ்லாத்தை அழியவிருந்த நிலையில் இருந்து தாங்கிப் பிடித்து விட்டான். அவன் அளித்த வாக்குறுதியான

وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِى ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْۢ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا

அதாவது, அச்சத்திற்குப் பிறகு நாம் மீண்டும் அவர்களை உறுதியாக நிலைநிற்கச் செய்வோம் என்பதை நிறைவேற்றி விட்டான்.

இவ்வாறே ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலத்தில் நடந்தது. அன்னார் இஸ்ரவேலர்களை அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கேற்ப கொண்டு சேர்க்க வேண்டிய இலக்கை அடைவதற்கு முன்பே எகிப்திற்கும் கன்ஆன் தேசத்திற்கும் இடைப்பட்ட வழியில் மரணித்து விட்டார்கள். அன்னாரின் மரணத்தால் இஸ்ரவேலர்களுக்கு பெருந்துன்பம் ஏற்பட்டது. தவ்ராத்தில் எழுதப்பட்டிருப்பது போல இஸ்ரவேல் மக்கள் இந்த அகால மரணத்தின் துக்கத்தாலும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களது தீடீர் பிரிவினாலும் நாற்பது நாள்கள் வரை அழுது கொண்டிருந்தனர்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எனவே அன்பிற்குரியவர்களே! ஆரம்பத்திலிருந்தே அல்லாஹ்வின் நடைமுறை இதுதான். அவன் எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக இரண்டு வல்லமைகளைக் காட்டுகின்றான். எனவே இப்போது இறைவன் தனது பழமையான அந்த நடைமுறையை விட்டுவிடுவது சாத்தியமில்லை. எனவே நான் உங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்ற விஷயங்களில் வருத்தப்படாதீர்கள். உங்கள் உள்ளம் கவலை அடைய வேண்டாம். ஏனெனில், அந்த இரண்டாம் வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும், நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால், நான் சென்றுவிட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். இறைவனின்

வாக்குறுதி பராஹீனே அஹ்திய்யாவில் (குறிப்பிடப்பட்டு) உள்ளது. மேலும், அவ்வாக்குறுதி என்னைப் பற்றி அல்ல ; மாறாக, உங்களைப் பற்றியதாகும். நான் உம்மைப் பின்பற்றும் உமது ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்களின் மீது மேலோங்கச் செய்வேன் என இறைவன் கூறியுள்ளான்.

எனவே என்னைப் பிரியும் நாள் உங்களுக்கு வரவேண்டியது அவசியமானதாகும். அதற்குப் பிறகு நிரந்தரமான வாக்குறுதிக்கான அந்த நாள் வரும். நமது இறைவன் வாக்குறுதிகளில் உண்மையானவனும், நன்றியுள்ளவனும் உண்மையாளனுமாவான். அவன் வாக்குறுதியளித்த எல்லாவற்றையும் உங்களுக்கு காட்டுவான். இந்த நாட்கள் உலகத்தின் கடைசி நாட்களாகும். பல துன்பங்கள் இறங்கும் காலமாகும். ஆனாலும், இறைவன் தெரிவித்திருக்கின்ற செய்திகள் அனைத்தும் நிறைவேறும் வரை இந்த உலகம் நிலைபெற்றிருக்கும்.

**நான் இறைவன் தரப்பிலிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். மேலும் எனக்குப் பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள்.**

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஆசியா, ஐரோப்பா போன்ற உலகின் பல்வேறு கண்டங்களிலும் பூமியிலுள்ள பல்வேறு இடங்களிலும் வாழ்ந்து வருகின்ற எல்லா நல்ல ஆன்மாக்களையும் எல்லா நல்லியல்பு கொண்டவர்களையும் ஏகத்துவத்தின் பக்கம் ஈர்த்து தனது அடியார்களை ஒரே மார்க்கத்தில் ஒன்று சேர்க்கவே இறைவன் விரும்புகிறான். இதுவே இறைவனுடைய நோக்கமாகும். இதை நிறைவேற்றுவதற்காகவே நான் உலகிற்கு அனுப்பப்பட்டுள்ளேன். எனவே நீங்கள் மென்மை, நல்லொழுக்கம், துஆக்கள் ஆகியவற்றில் அழுத்தம் கொடுத்து இந்த நோக்கத்தைப் பின்பற்றுங்கள்.

(அல் வஸிய்யத் நூல் -தமிழாக்கம், பக்கம் 12 - 14)

ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்த பிறகு, அல்லாஹ் தன்னுடைய வாக்குறுதிகளுக்கு ஏற்ப ஜமாஅத்தை முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் ஹக்கீம் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்களின் கையில் ஒன்றிணைத்தான். அஞ்சுமனின் கையில் நிர்வாகம் இருக்க வேண்டும் என்று சில மக்கள் விரும்பினார்கள். ஆனால், ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தம் இரும்புக் கரங்களால் அந்தக் குழப்பத்தை முடிவுக்கு கொண்டு வந்துவிட்டார்கள்.

பின்னர், ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் (ரலி) அவர்கள் கிலாஃபத் அரியணையில் அமர்ந்தார்கள். அன்னார் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட தருணத்திலும் தம்மை அறிவிலும் புத்திசாலித்தனத்திலும் மிகப் பெரியவர்களாக கருதிய சில மக்கள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்தனர்.

கிலாஃபத் தேர்தலை முழுமையாக தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும் சில மாதங்கள் வரை ஒத்தி வைக்கலாம்;இதன் மூலம் தங்களுக்கு ஜமாஅத்தில் பிரிவினையை உண்டாக்குவதற்கு வாய்ப்பு கிடைத்துவிடும் என்பது அவர்களுடைய முயற்சியாக இருந்தது. ஆனால், அல்லாஹ் மீண்டும், தனது வாக்குறுதிக்கேற்ப நம்பிக்கை கொண்டவர்களின் ஜமாஅத்தை ஒரு கையில் ஒன்றிணைத்து விட்டான். கிலாஃபத்தை எதிர்த்தவர்களும் நயவஞ்சகர்களும் தோல்வியைத் தழுவினர்.

அல்லாஹ்வின் அருளினால் அன்னாரது கிலாஃபத் ஏறத்தாழ 52 ஆண்டுகளைத் தழுவியிருந்தது. உலகத்தில் மிஷன் ஹவுஸ்கள் திறக்கப்பட்டன. ஜமாஅத்தின் நிர்வாக வடிவம் உறுதியானது. இவை அனைத்தும் அன்னாரது காலகட்டத்தில் நடைபெற்றது.

பின்னர், அன்னாரின் மறைவுக்குப் பிறகு மூன்றாவது கிலாஃபத் காலகட்டம் ஆரம்பமானது. மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் உதவி மற்றும் ஆதரவால் கிலாஃபத்தின் அந்தஸ்தில் அமர்ந்தார்கள். பின்னர், இறை நியதிக்கு ஏற்ப அன்னார் மரணமடைந்தபோது நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் (ரஹ்) அவர்களை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நான்காவது கலீஃபாவின் அந்தஸ்தில் நிலைநிறுத்தினான்.

அடுத்து, அன்னார் மரணமடைந்த போது, அல்லாஹ் என்னை இந்த அந்தஸ்தில் நிறுத்தினான். என்னுடைய பலவீனங்களும், குறைகளும் இருந்தும் கூட அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்திருந்த வாக்குறுதிகளுக்கு ஏற்ப ஜமாஅத்தை முன்னேற்றப் பாதைகளில் இட்டுச் சென்றான். இந்தக் காலகட்டத்தில் எதிரி ஜமாஅத்தில் பிரிவினையை உண்டாக்குவதற்கும், அதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் அச்சுறுத்துவதற்கும் எண்ணற்ற முயற்சிகளை செய்தான்.

உலகத்தின் பல்வேறு நாடுகளில் அஹ்மதிகள் ஷஹீத் ஆக்கப்பட்டனர். உலகப் பேராசைகள் ஊட்டப்பட்டன. ஆனால், அல்லாஹ் அஹ்மதிகளை கிலாஃபத்துடனான தொடர்பு, ஈமான் மற்றும் நிச்சய உறுதி ஆகியவற்றில் அதிகரிக்கச் செய்து கொண்டே சென்றான். அன்னார் ஆசியாவின் அஹ்மதிகளாகட்டும் அல்லது ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் அஹ்மதிகளாகட்டும் அல்லது ஆஃப்ரிக்காவின் அஹ்மதிகளாகட்டும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் கிலாஃபத்துடன் இருக்கும் இந்தத் தொடர்பை அல்லாஹ்வால் மட்டுமே உருவாக்க முடியும்.

ஜமாஅத் மக்களுக்கு கிலாஃபத்துடனும், காலத்தின் கலீஃபாவுக்கு ஜமாஅத்துடனும் இருக்கின்ற இப்படிப்பட்ட அன்பு மற்றும் தூய்மையின் தொடர்பை உருவாக்குவதற்கான ஆற்றல் எந்த மனிதரிடமும் இல்லை. நான் எந்த நாட்டுக்குச் சென்றாலும் அங்கு இந்தக் காட்சிகள் காணக் கிடைக்கின்றன. இவை வெறும் பேச்சளவிலான விஷயங்கள் அல்ல ; மாறாக, இன்றைய நாட்களிலோ கேமராவின் கண் இவற்றைப் பாதுகாத்து வைத்து விடுகின்றது.

MTA இந்தக் காட்சிகளைக் காட்டிக் கொண்டே இருக்கின்றது. அவற்றைப் பார்த்து எதிரிகளும், அல்லாஹ்வின் செயல் ரீதியான சாட்சி உங்களுடன் இருக்கின்றது என்று கூறும் நிர்பந்தத்திற்கு ஆளாகி விட்டனர்.

பிறகு, ஒவ்வொரு மாதமும் எனக்கு வருகின்ற ஆயிரக்கணக்கான கடிதங்கள் இருக்கின்றன. கடிதம் எழுதுபவர்களுக்கு ஜமாஅத்துடன் எந்த அளவு மனத்தூய்மை மற்றும் நன்றியுணர்வு மிக்கத் தொடர்பு இருக்கின்றது என்பதையும், எவ்வாறு அல்லாஹ் சுயமே மக்களை கிலாஃபத்துடன் இணைக்கின்றான் என்பதையும், எவ்வாறு அவர்களுடைய உள்ளங்களில் கிலாஃபத் மீதான அன்பு மற்றும் தொடர்பை அல்லாஹ் உருவாக்கி விடுகின்றான் என்பதையும் அந்தக் கடிதங்கள் வெளிப்படுத்துகின்றன.

இப்பொழுது நான் சில கடிதங்களின் மாதிரிகளை உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன். அல்லாஹ் எவ்வாறு

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையின் பக்கம் மக்களை வழிநடத்துகின்றான் என்பதையும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களுக்குப் பிறகு தொடரும் அன்னாரது கிலாஃபத் அமைப்பு அல்லாஹ்வின் சிறப்பான ஆதரவைப் பெற்றிருக்கின்றது என்ற விஷயத்தை மக்களின் உள்ளங்களில் பதியச் செய்கின்றான் என்பதையும் அந்தக் கடிதங்கள் வெளிப்படுத்துகின்றன.

தன்ஸானியாவில் மோன்ஸே என்ற ஒரு மண்டலம் உள்ளது. அங்கிருந்து முஅல்லிம் அறிக்கை அனுப்பியுள்ளார். அவர் எழுதுகின்றார்: ஒருநாள் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு முபல்லிஃக் உடன் நாங்கள் ஜமாஅத் மக்களை சந்திக்கச் சென்றோம். லுஹர் தொழுகைக்குப் முன்பு நாங்கள் பள்ளிக்குத் திரும்பி வந்தபோது பள்ளியின் படிக்கட்டில் ஒரு பெண்மணியைப் பார்த்தோம். நலம் விசாரித்தபோது அவர் துஆ செய்ய வைக்க வந்திருப்பது தெரிய வந்தது.

அனேகமாக, ஜமாஅத் அல்லாத முஸ்லிம்கள் ஓதி ஊதக்கூடிய வழிமுறையை மேற்கொள்வது போன்று நாமும் செய்வோம் என்று அவர் நினைத்திருந்தார் போல! ஆஃப்ரிக்க மக்களில் ஓதி ஊதுவதற்கான இந்த வழக்கம் பெரிதும் உள்ளது. எனவே, அவர்களுக்கு ஜமாஅத்தின் போதனைகளை முரப்பி ஸாஹிப் தெரியப்படுத்தினார். எவ்வாறு இருப்பினும், அவர்களுக்காக அங்கு துஆவும் செய்து வைத்தார். அந்தப் பெண்மணி கூறினார்:

எனக்கு கனவுகள் வருகின்றன. அவற்றில் நீளமான தாடியை உடைய, கோதுமை நிறத்தை உடைய ஒரு மனிதர், முரப்பி ஸாஹிப் மார்க்கத்தைப் புரிய வைப்பது போன்றே எனக்கு மார்க்கத்தைப் புரிய வைப்பார். இதைக் கேட்ட பிறகு, அவருக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் கலீஃபாக்களின் நிழற்படங்கள் அவருக்கு காட்டப்பட்டன.

அந்தப் பெண்மணி கூறினார்: எந்த சான்றோர் அவருக்குக் கனவில் வந்து புரிய வைக்கின்றாரோ அவருடையத் தோற்றம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடன் ஒத்துப் போகின்றது. இதற்குப் பிறகு அந்தப் பெண்மணி தம் மூன்று பிள்ளைகளுடன் சேர்ந்து பைஅத்தும் செய்து விட்டார். இந்தக் காலத்திலும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடன் சேர்த்துக் (கனவு) காட்டப்பட்டுள்ளது.

பிறகு, இந்தோனேஷியாவின் மாநிலம் மேற்கு காலிம்தான் இருக்கின்றது. அங்குள்ள ஒரு பகுதியில் வசிக்கக்கூடியவர், அவர் பெயர் அப்துல்லாஹ் ஆகும். அவர் தம் மனைவி மக்களுடன் பைஅத் செய்தார். அவருக்கு 2019 ஆம் ஆண்டிலிருந்து (ஜமாஅத்துடன்) தொடர்பு இருந்தது. முபல்லிஃக் அவர்களின் பேச்சால் அவர் மிகவும் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்தார். எனவே, அவர் பள்ளிவாசலுக்கு வந்து சென்றார். இவர் மற்ற மவ்லவிகளை விட முற்றிலும் மாறுபட்டவர் என்று அவர் கூறியிருந்தார்.

எவ்வாறு இருப்பினும், இவ்வாறு அவர் நம் மிஷனரிக்கு அருகில் இருந்ததன் காரணமாக அந்தப் பகுதியின் மவ்லவிகள் மற்றும் அந்த வட்டார மக்கள் இவர் மீது அவதூறுகளை சுமத்த ஆரம்பித்து விட்டார்கள். இவரைத் தமது பள்ளிவாசலுக்குக் கூட வரவிடாமல் நுழையவிடாமல் தடுத்து விட்டார்கள். அவர் கூறினார்:

நான் கனவு பார்த்தேன். நான் ஒரு நீர்சுழலில் சிக்கிக் கொண்டேன். அது என்னை மூழ்கடிக்கவிருந்தது. ஆனால், ஒரு சான்றோர் என்னை காப்பாற்ற வந்தார். அவர் ஜிப்பா அணிந்திருந்தார். ஒரு தடியைப் பிடித்திருந்தார். இதைக் கேட்ட நம் முபல்லிஃக் அந்த நபருக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு நிழற்படத்தைக் காட்டினார். அதில் ஹுஸூர் (அலை) அவர்கள் தடியைப் பிடித்திருந்தார்கள்.

அந்த நபர் நடுங்கியவாறு கூறினார்: இவர் அதே சான்றோர்தான். இவர் தான் கனவில் என்னைத் தமது தடியால் நீர் சுழலில் இருந்து காப்பாற்றினார்.

இதேபோன்று அவர் மகனும் கனவு பார்த்திருந்தார். அப்போது தந்தை மட்டும் பார்க்கவில்லை; மகனுமே பார்த்திருக்கின்றார். அவர் இதேபோன்று ஜிப்பா அணிந்திருக்கும் பல மக்களைக் கண்டார். இதைக் கேட்ட நம் முபல்லிஃக் அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நிழற்படத்துடன் கலீஃபாக்களின் நிழற்படங்களையும் காட்டினார். அப்பொழுது அந்த இளைஞன் வியப்படைந்தவாறு கூறினார். அவர் பார்த்த மக்களில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களும் இருந்தார்கள். நானும் இருந்தேன்.

இவர்கள் அனைவரும் நான் பார்த்த அதே மக்கள் தான்" என்று அவர் கூறினார். அல்லாஹ் இவர்கள் அனைவரையும் ஒன்றாக்கியும் காட்டி விட்டான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு இருக்கக் கூடிய இந்த கிலாஃபத் அமைப்பு எப்படிப்பட்ட அமைப்பு என்றால் அது தொடர்ச்சியை நிலைநிறுத்தியுள்ளது என்பதைக் காட்டி விட்டான்.

எவ்வாறு இருப்பினும், இந்த கனவுகளுக்குப் பிறகு அந்தக் குடும்பம் பைஅத் செய்துவிட்டது. உண்மையான துடிப்பு இருந்தால், பிறகு இவ்வாறு அல்லாஹ் வழிநடத்தி விடுகின்றான்.

பிறகு இந்தோனேஷியாவின் தெற்கு மாநிலத்தில் பாரோ என்ற ஓர் இடம் இருக்கின்றது. அவர்கள் கூறுகின்றார்கள்: அமீர் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: ஒருமுறை நம் முபல்லிஃக் பள்ளிவாயிலில் ஃபஜ்ர் தொழுகை தொழ வைத்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு நபர் ஜமாஅத்தான தொழுகையில் கலந்து கொள்வதற்காக வந்தார். அவர் கூறினார்: அவர் வேறு இடத்தில் இருந்து இங்கு தன் மனைவியின் உறவினரை சந்திக்க வந்திருந்தார். உரையாடலுக்கு இடையில் அவர் தன் கடந்தகால வாழ்வைப் பற்றி கூறினார். அது கஷ்டங்களால் நிறைந்திருந்தது. அவர் கூறினார்:

ஒருமுறை கஷ்டமான நிலையில் இருக்கும்போது அவர் ஒரு கனவு பார்த்தார். அதில் வெள்ளை நிற தலைப்பாகை மற்றும் தாடி வைத்திருந்த ஒரு பெரியவரை அவர் சந்தித்தார். கனவில் தலைப்பாகை அணிந்திருந்த அந்தப் பெரியவர், இவரிடம் 40 நாள்கள் வரை ஒவ்வொரு ஃபஜ்ர் தொழுகையிலும் ஸதக்கா கொடுக்கும் இடத்தில் ஸதக்கா கொடுத்துக் கொண்டே இருந்தால் கஷ்டங்கள் அகன்றுவிடும் என்று கூறினார். கனவில் கூறப்பட்டது போன்றே அவர் செய்தார்.

அந்த நபர் கூறுகின்றார்: இருபதாவது நாளில் (இருந்து) அவருடைய கஷ்டங்கள் முடிவடைய ஆரம்பித்துவிட்டன. பல வகையான வேலைகளும் வசதிகளும் கூட கிடைத்து விட்டன. அவர் கூறினார்:

சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு வெள்ளை நிற தலைப்பாகை மற்றும் தாடி வைத்திருந்த அந்த நபர் மீண்டும் ஒருமுறை கனவில் வந்தார். பழங்களைப் பெறுவதற்காக அவரை மலைக்கு அழைத்துச் சென்றார். மேலும், எவர்கள் தமக்குள் இறையச்சத்திற்கான அடையாளங்களை வெளிப்படுத்துகின்றார்களோ அவர்களுக்கு மட்டுமே இந்தக் கனவை கூற வேண்டும்

என்று கூறினார். இதற்குப் பிறகு முபல்லிஃக் அவருக்கு கலீஃபாக்களின் நிழற்படங்களைக் காட்டினார். அப்போது அந்த நபர் ஆச்சரியத்துடன் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் நிழற்படத்தைச் சுட்டிக் காட்டியவாறு இந்த நபரை நான் பார்த்திருக்கின்றேன் என்று கூறினார். எனவே, அந்த நபர் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டார்.

பிறகு மாலி நாட்டில் வசிக்கக் கூடிய ஒரு பெண்மணி இருக்கின்றார். அவருடைய பெயர் ஸராஜீ ஆகும். அவரைப் பற்றி உள்ளூர் முபல்லிஃக் கூறுகின்றார்: மிகவும் தூய்மையானவர். அக்கம் பக்கத்தில் உள்ள கிராமங்களில் எங்கெல்லாம் தப்லீக் நிகழ்ச்சியைப் பற்றி கேள்விப்படுகிறாரோ அங்கு என்னை மிதிவண்டியில் அமர வைத்து அழைத்துச் செல்லுங்கள் என்று தம் பிள்ளைகளுக்கு கூறுவார்.

அஹ்மதி ஆகுவதற்கு முன்பு அவர் கனவில் இரண்டு குரல்களைக் கேட்டு வந்ததாக அவர் கூறுகின்றார். ஒன்று, என் குத்பாவுடன் தஷஹ்ஹுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை நான் ஓதக் கூடிய திலாவத்தின் ஓசை. இரண்டாவது, அங்குள்ள முபல்லிஃக் முஆஸ் ஸாஹிப் அவர்களின் தப்லீஃகின் ஓசையாகும். எனக்குக் கனவில் வருகின்ற இந்தக் குரல்கள் யாருடையவை? என்று நான் கவலை அடைந்து வந்தேன்.

அப்போது ஜமாஅத்தின் ரேடியோ நிகழ்ச்சி ஆரம்பமானது. அவர் ரேடியோவில் எனது குத்பாவைக் கேட்டார்.

திலாவத்தைக் கேட்டார். மற்ற தப்லீஃக் நிகழ்ச்சிகளைப் பார்த்தார். அப்போது நான் கேட்டு வந்த அதே குரல்கள் தான் இவை என்று கூற ஆரம்பித்தார். எனவே, இந்த விஷயம் அவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்குக் காரணமாக அமைந்தது.

கேமரூன் என்ற இன்னொரு நாடு உள்ளது. அங்குள்ள அறிக்கையும் இருக்கின்றது. அப்துர் ரஹ்மான் பேலா என்ற ஓர் இளைஞர் தான் அஹ்மதியான சம்பவத்தை எடுத்துரைக்கின்றார். அவர் கூறுகின்றார்:

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் கனவில் இரண்டு சான்றோர்களைப் பார்த்தேன். அவர்களில் ஒருவர் என்னிடம், நீ என்ன செய்கின்றாய்? என்று கேட்டார்.

நான் நகரத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டி சவாரிகளை அழைத்துச் செல்கின்றேன். இவ்வாறு என் வாழ்வைக் கழிக்கின்றேன் என்று கூறினேன். அப்பொழுது இரண்டாவது நபர் என்னிடம், மோட்டார் சைக்கிளை விடுங்கள்; இங்கு வந்து தொழுங்கள் என்று கூறினார். எனவே நான் தொழ வைத்தேன். அதற்குப் பிறகு நான் கண் விழித்து விட்டேன். இவர் கூறுகின்றார்:

சில நாட்களுக்குப் பிறகு நான் சந்தையில் ஓர் இளைஞரைப் பார்த்தேன். அவர் பிரசுரங்கள் விநியோகித்துக் கொண்டிருந்தார். அந்தப் பிரசுரங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பிரசுரங்கள் ஆகும். நான் வீட்டிற்கு வந்து அந்தப் பிரசுரத்தை கவனமாகப் பார்த்தேன்; படித்தேன். அப்போது அந்த பிரசுரத்தில் நான் ஒரு சான்றோரின் நிழற்ப்படத்தைப் பார்த்தேன். இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நிழற்படம் ஆகும். அதை நான் கனவில் பார்த்திருந்தேன். இதற்குப் பிறகு ஜமாஅத்துடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்தேன். முஅல்லிமுடன் இவருக்கு மேற்கொண்டு தொடர்பு அதிகரித்தது.

இவர் மேற்கொண்டு நூல்களைப் பெற்றார். இவர் கனவில் முதலில் பார்த்திருந்த இன்னொரு நபரைப் பற்றி கூறுகின்றார்: அந்த நிழற்படமும் எனக்கு மற்ற புத்தகங்களில் தென்பட்டுவிட்டது.

அது என்னுடைய படமாகவே இருந்தது.

இவர் கூறுகின்றார்: நான் பெயரைக் கேள்விப்பட்டிருந்தேன்தான்; ஆனால், அதிகம் அறிந்திருக்கவில்லை. ஆனால், கனவில் எந்த நபர் என்னைத் தொழ வைக்குமாறு கூறினார்களோ அவர்கள் ஜமாஅத்தின் தற்போதைய கலீஃபா ஆவார்கள். அன்னார் கனவில் தொழுகைக்காக அழைத்தது மற்றும் தொழ வைத்ததன் பரக்கத்தால் கடந்த ஆண்டு எங்களுடைய கிராமத்தின் தலைவர் மரணித்தபோது அவர் கூறுகிறார்: தற்செயலாக அவருக்கு சந்ததியும் இருக்கவில்லை. அதனால், பின்னர் அவருடைய உயிலுக்கு ஏற்ப நான் கிராமத் தலைவராகவும் ஆக்கப்பட்டேன். இந்த கௌரவம் அளிக்கப்பட்டது. எனக்கு இந்த கண்ணியம் ஜமாஅத்தின் காரணமாகவே கிடைத்ததாக நான் கருதுகின்றேன் என்று அவர் கூறுகிறார்.

பின்னர், கினீபஸாவோ என்ற இன்னொரு நாடு இருக்கின்றது. அங்குள்ள முபல்லிஃக் இன்சார்ஜ் கூறுகின்றார்: இங்கு ஒரு பகுதி இருக்கின்றது. அங்குள்ள ஒரு பெண்மணி மாரியா ஸாஹிபா ஆவார்கள். அவர்களின் இரண்டு மகன்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். இவர்களின் பெயர் ஆயிஷா மாரியா ஆகும். அப்பொழுது ஆயிஷா ஸாஹிபா அவர்களின் அண்ணன் - அவர் ஜமாஅத்திற்கு கடுமையான எதிரியாவார். அவரே ஆயிஷா அவர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் பராமரித்து வந்தார். உணவு போன்ற பொருட்களை வாங்கி கொடுக்கின்றார். தன் சகோதரிக்கு ஃபோன் செய்து, "உன் மகன்கள் அஹ்மதிய்யத்தை விடவில்லை என்றால், நான் உங்களுக்கு உதவி செய்வதை நிறுத்தி விடுவேன். எனக்கு உங்களுடன் எந்தத் தொடர்பும் இருக்காது" என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இந்த விஷயத்தைக் கேட்டு ஆயிஷா மிகவும் கவலையடைந்தார்கள். மகன்களை அழைத்து அஹ்மதிய்யத்தை விட்டு விடுங்கள் என்று கூறினார்கள். ஆனால், அந்த மகன்கள் எங்களுக்கு அல்லாஹ் போதுமானவன். நாங்கள் ஒருபோதும் அஹ்மதிய்யத்தை விடமாட்டோம் என்று பதில் அளித்தார்கள். மகன்களின் இந்த பதிலைக் கேட்டு ஆயிஷா இன்னும் அதிகமாக கவலை அடைந்தார்கள். என்ன செய்வது? என்று அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

அவர்கள் கூறுகின்றார்கள்: இரண்டு நாட்களுக்குப் பிறகு நான் கனவில் பார்த்தேன். இவர்கள் கனவில் மிகவும் கவலையாக இருக்கின்றார்கள். சத்தமாக அழுது கொண்டிருக்கின்றார்கள். இதற்குள் வெள்ளை நிற ஆடையை அணிந்திருந்த வெள்ளை தாடியை உடைய ஒரு நபர் இவர்களை அழைத்தார். அழுவதற்கான காரணத்தைக் கேட்டார். அதனால், இவர்கள் நடந்த அனைத்தையும் கூறினார்கள். அப்பொழுது அந்த நபர் ஆறுதல் அளித்தவாறு கவலைப்படாதீர்! உம் மகன்கள், அவர்கள் அனைவரையும் விட மேலோங்குவார்கள் என்று கூறினார்.

இந்த விஷயத்தைக் கேட்டு அவர்கள் கண் விழித்து விட்டார்கள். கனவுக்குப் பிறகு அவர்களது மனம் நிம்மதி அடைந்திருந்தது. பொழுது புலர்ந்ததுமே அவர்கள் கனவை நம் மிஷினரியிடம் கூறினார்கள்: மிஷினரீ ஸாஹிப், இவர்களுக்கு என்னுடைய நிழற்படத்தைக் காட்டினார். அப்போது இதே நபர் தான் என் கனவில் வந்தார். மேலும் எனக்கு ஆறுதல் கூறினார் என்று அவர்கள் கூறினார்கள்.

இப்பொழுது அல்லாஹ்வின் அருளினால் இவர்கள் மிகவும் தூய அஹ்மதியாக இருக்கின்றார்கள். லஜ்னாவின் ஒவ்வொரு பணியிலும் முன் வரிசையில் கலந்து கொள்கின்றார்கள்.

கென்யாவுடைய ஒரு சம்பவம் இருக்கின்றது. நகோரோ என்ற மண்டலத்தின் Bhatti என்ற பகுதியில் நம் ஜமாஅத் இருக்கின்றது. இந்தப் பகுதி பெரும்பாலும் கிறித்தவர்களைக் கொண்ட பகுதியாகும். ஒரு சிறிய நகர் இருக்கின்றது.

அந்த நகரத்திலும் எண்ணற்ற, சுமார் 550 தேவாலயங்கள் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

அஹ்மதி முஸ்லிம்களின் ஒரே சென்டர் உள்ளது. ஒருநாள் ஒரு முஸ்லிம் நம்முடைய தொழுகை மையத்திற்கு வந்தார். தொழுகையில் கலந்து கொண்டார். தொழுது முடித்த பிறகு அவர் கூறினார்: அவருடைய பெயர் முஹம்மது அப்தீ ஆகும். அவர் அங்கு உள்ளூர் வாசியாவார். அவர் கூறினார்; இங்கு ஒரு தொழுகை மையம் இருப்பது சில நாட்களுக்கு முன்னால் எனக்குத் தெரிய வந்தது. எனவே நான் தொழுதவதற்காக வந்துவிட்டேன்.

இதைக் கேட்டு அவருக்கு ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. ஆனால், அவர் எப்படிப்பட்ட சில விஷயங்களைப் பேசினார் என்றால் அதிலிருந்து அவர் ஜமாஅத்திற்கு எதிர்ப்பான தோரணையைக் கொண்டிருப்பது தெரிய வந்தது. ஒருநாள் வழியில் மீண்டும் சந்தித்தபோது, நீங்கள் முஸ்லிம் சகோதரர் ஆவீர்கள். சரி உங்களுக்கு கருத்துவேறுபாடு இருக்கின்றதுதான்; ஆனால், பரவாயில்லை. நீங்கள் தொழுவதற்காக எங்களுடைய சென்டருக்கு வந்து செல்லுங்கள். உங்களுக்கு ஏதாவது ஆய்வுகள், கேள்விகள் இருக்கின்றது என்றால் தயக்கம் இன்றி நீங்கள் கேட்கலாம். நாங்கள் பதில் கூறுவோம் என்று முஅல்லிம் ஸாஹிப் அவரிடம் கூறினார்.

முஅல்லிம் ஸாஹிப் கூறுகின்றார்: அல்லாஹ் அவரது மனதைத் திறக்க வேண்டும் என்பதற்காக நான் துஆவும் செய்து கொண்டிருந்தேன். சில நாட்களுக்குப் பிறகு அவர் நான் தங்கும் இடத்திற்கு வந்தார். அந்த நபருடைய பெயர் முஹம்மது அப்தீ ஆகும். அப்பொழுது வீட்டில் MTA ஓடிக் கொண்டிருந்தது.

அங்கு MTA-வில் என்னுடைய குத்பா ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. அவர் நீண்ட நேரம் வரை மிகவும் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார். குத்பா முடிவடைந்த போது நான் பைஅத் செய்ய விரும்புகின்றேன் என்று அவர் கூறினார்.

முஅல்லிம் ஸாஹிப் கூறுகிறார்: அதனால் எனக்கு மிகவும் வியப்பு ஏற்பட்டது. வெளிப்படையில் இவர் எதிரியாக இருந்தார். திடீரென்று எப்படி இந்த மாற்றம் ஏற்பட்டு விட்டது?

ஆக, அவர் பைஅத் செய்த போது அவரிடம் அதற்கான காரணத்தைக் கேட்டேன். அதற்கு அவர் கூறினார்:

கடந்த இரவின் முந்தைய பகுதியில் நான் கண் விழித்தபோது, நான் வெளியில் முற்றத்திற்கு வந்தேன். திடீரென்று என்னுடைய பார்வை வானத்தின் பக்கம் பட்டது. அப்பொழுது ஒளிமிக்க ஒன்று எனக்குத் தென்பட்டது. அது என் உள்ளத்தில் மிகவும் ஆழமான மதிப்பச்சத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியது. தற்போது நான் தங்களிடம் வந்தபோது, இங்கு நான் கலீஃபா அவர்களின் குத்பாவைப் பார்த்தபோது இரவு இருந்த அந்தப் படம் என் சிந்தனையில் முழுமை பெற்றது. இப்பொழுது நான் முழு குடும்பத்துடன் பைஅத் செய்கின்றேன். ஜமாஅத்தில் இணைகின்றேன்.

இப்பொழுது பாருங்கள்! எவ்வாறு ஓர் எதிரிக்கு அல்லாஹ் அஹ்மதிய்யத்தின் உண்மையை மட்டும் வெளிப்படுத்தவில்லை; அதற்கும் மேற்பட்டு அவருடைய உள்ளத்தில் கிலாஃபத்துடன் தொடர்பையும் உருவாக்குகின்றான். இது எந்த ஒரு மனித முயற்சியாலும் நடைபெற முடியாது.

கேம்ரூன் என்ற இன்னொரு நாடு இருக்கின்றது. அங்கு மர்வா என்ற ஒரு நகரம் இருக்கின்றது. அங்குள்ள பள்ளி ஆசிரியர் சுலைமான் ஸாஹிப் கூறுகின்றார்கள்: நான் கேபிள் டிவியில் MTA-வின் ஒரு நிகழ்ச்சியைப் பார்த்தேன். அதில் அஹ்திய்யா ஜமாஅத்தின் கலீஃபா பிள்ளைகளின் கேள்விகளுக்கு பதில் அளித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பிள்ளை உக்ரைன் மற்றும ரஷ்யாவுக்கு இடையிலான போர் தொடர்பாகக் கேள்வி கேட்டார். அப்போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் மிகவும் நல்ல தோரணையில், எளிமையான வழிமுறையில் பதில் அளித்தார்கள். மேலும், இதையும் கூறினார்கள்: நான் உலகத்தின் ஆற்றல்களில் பெரும் ஆற்றல் மிக்க தலைவர்களுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளேன். இப்பொழுது உலகத்தில் அமைதியை நிலைநாட்டவில்லை என்றால் உலகத்தில் நீதியை நிலைநாட்டவில்லை என்றால் பின்னர் மிகவும் பயங்கரமான நிலைமைகள் உருவாகிவிடும் என்று அவர்களை எச்சரித்தும் இருக்கின்றேன்.

அவர் கூறுகின்றார்; இந்த விஷயங்களைக் கேட்டு, நான் ஜமாஅத்தைச் சார்ந்த யாராவது ஒருவருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். ஒருநாள் மர்வா நகரத்தின் உள்ளூர் டிவியில் அங்குள்ள உள்ளூர் மொழியில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் குத்பாவின் மொழியாக்கம் வந்து கொண்டிருந்தது. டிவி திரையில் ஜமாஅத்தின் சத்ர் அவர்களின் தொடர்பு எண் வந்தது. எனவே நான் ஜமாஅத்தை தொடர்பு கொண்டேன்.

அதற்குப் பிறகு, ஜமாஅத்தின் நூல்களைப் படித்தேன். காலத்தின் கலீஃபா அவர்களின் நூல் உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும் என்பதைப் படித்தேன். அதற்குப் பிறகு என் உள்ளம் திருப்தி அடைந்தது. நான் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டேன். முஅல்லிம் ஸாஹிப் கூறுகின்றார்கள்: இப்பொழுது இவர்கள் ஜமாஅத்தில் மிகவும் சுறுசுறுப்பான உறுப்பினர் ஆவார்கள்.

பின்னர், ஸிராலியோனிலிருந்து முபல்லிஃக் எழுதுகின்றார்: இப்ராஹீம் என்ற பெயரைக் கொண்ட ஒரு நபர் ஜமாஅத்தின் எதிரியாக இருக்கவில்லைதான். அவர் MTA வவில் என்னுடைய குத்பாக்களைக் கேட்டார். அவர் வெளிப்படையாகக் கூற ஆரம்பித்துவிட்டார். ஆனால், அவர் அஹ்மதியாக இருக்கவில்லை. எதிரி இல்லை் அஹ்மதியாகவும் இல்லை. அப்போது அவர் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக போதனையை வழங்கும் மௌலவிமார்கள் பொய்யில் நிலைத்திருக்கின்றார்கள் என்று (வெளிப்படையாகக்) கூறினார்.

அவர் கூறினார்: நானே ஜமாஅத்தின் இமாம் அவர்கள் கூறுவதைக் கேட்டிருக்கின்றேன். அவர்கள் திருக்குர்ஆனிலிருந்து சான்றுகள் அளித்துள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரைக் கூறுகின்றார்கள். அஹ்மதிகளின் கலிமாவும் அதேதான். எல்லா விஷயங்களையும்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

இஸ்லாத்திற்கு ஏற்பவே செய்கின்றார்கள். எனவே அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எவ்வாறு பொய்யான ஜமாஅத்தாக இருக்க முடியும்?

இதற்குப் பிறகு அவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். சந்தாக்களிலும் இணைந்தார். மிகவும் தூய அஹ்மதி ஆவார்.

ட்ரீனி டாட் உடைய அமீர் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: புதிதாக பைஅத் செய்த ஒருவர் ஷரிதா ஸாஹிபா ஆவார்கள். இவர்கள் கடந்த ஆண்டு கணவருடன் பைஅத் செய்தார்கள். இவர்கள் தம்முடைய இரண்டு முஸ்லிம் அல்லாத சகோதரிகள் மற்றும் அண்டை அயலாருக்குத் தம் வீட்டில், டிவியில் யூகே ஆண்டு மாநாட்டைப் பார்ப்பதற்காக அழைப்பு விடுத்திருந்தார்கள்.

இந்த மக்கள் மாநாட்டின் எல்லா ஏற்பாடுகளிலும் மிகவும் தாக்கத்திற்குள்ளானார்கள். குறிப்பாக என்னுடைய சொற்பொழிவுகள் பற்றி, எங்களுக்கு மிகவும் பிடித்துவிட்டன என்று கூறுகிறார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தே உண்மையான இஸ்லாமாகும். எல்லா இஸ்லாமிய பிரிவுகளும் இதேபோன்று ஆகிவிட்டால் இஸ்லாம் உலகத்தில் வெற்றி பெற முடியும் என்று கூற ஆரம்பித்து விட்டார்கள்.

அந்தப் பெண்மணி கூறுகின்றார்கள்: நான் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களைப் பார்த்து அழ ஆரம்பித்து விட்டேன். நான் அவர்களுடைய காலடிகளில் அமர்ந்திருப்பதாக உணர்ந்தேன்.

சில காலத்திற்குப் பிறகு அன்னாரின் கணவர் மரணித்து விட்டார்தான். ஆனால், அன்னார் தமது வீட்டை ஜமாஅத்திற்கு வஸிய்யத்தில் வழங்கி விட்டார்கள். ஜமாஅத் பெயருக்கு பதிவு செய்து கொடுத்துவிட்டார்கள். அதில் நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றது.

கருகிஸ்தானின் உள்ளூர்வாசி ஒருவர் அஹ்மதி ஆனார். சுல்தான் அதாகானு என்பவர். அவர் கூறுகின்றார்: என் மகனுக்கும் மனைவிக்கும் பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்திருந்தது. நான் 2017 -ல் ஒவ்வொரு ஜூமுஆ அன்றும் ஜமாஅத் மிஷன் ஹவுஸுக்கு செல்ல ஆரம்பித்தேன். நானும் என் மனைவியும் வாகனத்தில் செல்லும்பொழுது ஏறத்தாழ 12 கிலோ மீட்டர் பயணத்தில் நாங்கள் எப்பொழுதும் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் குத்பா உடைய ஒலிப்பதிவுகளைக் கேட்டுக் கொண்டே இருப்போம்.

நான் கடந்த குத்பாக்களைக் கேட்டபோதெல்லாம் அதற்குப் பிறகு என்னுடைய உணர்வுகள் மிகவும் வலுப்பெற்று வந்தன. ஆக, இந்த ஆண்டு மே மாதம் இரண்டாம் தேதி அருளுக்குரிய புனித ரமலான் மாதத்தின் நிறைவில் பெருநாள் அன்று நான் பைஅத் செய்தேன். இது கடந்த வருட விஷயமாகும். அவர் கூறுகின்றார்:

நான் இதை முதலில் கூற விரும்பி இருந்தேன். ஆனால், ஏதோ ஒருவகையில் இந்தப் பணி விடுபட்டு வந்தது. நான் சுருக்கமாக எழுதி இருக்கின்றேன். ஆனால், எனது ஆன்மாவுக்குள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை என்னால் சொற்களில் எடுத்துரைக்க முடியாது. நான் ஒவ்வொரு தொழுகையிலும் அல்லாஹ்விடம் இஸ்லாம் தொடர்பாக அறிவை அதிகரிக்குமாறு துஆ செய்கின்றேன். ஒவ்வொரு ஜூமுஆ தொழுகையும் எனக்குத் தொடர்ச்சியாக ஏதாவது ஒன்றை புதிதாக வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறது.

பேரா கோயா எனும் இடத்தில் ஒரு பெண்மணி இருக்கின்றார். லேஸாவா என்பவர். அவர் கூறுகின்றார்: அல்லாஹ் ஒவ்வொருவருக்கும் நேர்வழியை வழங்குவதற்கான பல்வேறு வழிகளை உருவாக்கி வைத்திருக்கின்றான். இஸ்லாம் அஹ்மதிய்யத்தை நோக்கிய எனது பயணம் கொரானோ தொற்று நோயின்போது ஆரம்பமானது. ஓய்வு நேரத்தில் ஏதாவது மொழியை கற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் நினைத்தேன். எனவே நான் ஆன்லைனில் அரபு மொழியைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்து விட்டேன்.

அரபு மொழி மூலமாகவே எனக்கு இஸ்லாம் தொடர்பாகவும் பல விஷயங்கள் தெரிய வந்தன. மேலும், நான் படிக்க ஆரம்பித்து விட்டேன். ஒருநாள் ஃபேஸ்புக்கின் அக்கவுண்ட்டைத் திறந்தேன். அப்பொழுது அங்கு காஃபி கேக் அண்ட் இஸ்லாம் என்ற தலைப்பில் பள்ளியில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கான அழைப்பிதழ் வந்திருந்தது. நான் என்னை பதிவு செய்து கொண்டேன். நேரத்திற்குச் சென்றுவிட்டேன்.

அங்கு முரப்பியை சந்தித்தேன். அவர்களின் மனைவியை சந்தித்தேன். பள்ளிவாசலில் அரபு மக்கள் மட்டும்தான் நுழைய முடியும் போல என்று முதலில் என் சிந்தனையில் சந்தேககங்களும், ஐயங்களும் இருந்தன. ஆனால், அங்கு சென்று இஸ்லாம் தொடர்பாக எந்த விஷயங்கள் தெரிய வந்தனவோ அவை எனக்கு முற்றிலும் புதிதாக இருந்தன. இஸ்லாத்தில் மார்க்க விவகாரத்தில் எந்த நிர்பந்தமும் இல்லை என்பதும் இஸ்லாம் முழுக்க முழுக்க அமைதி மற்றும் சமாதானத்திற்கான மார்க்கமாகும் என்பதும் எனக்குத் தெரிய வந்தது.

அன்று இரவு நான் பள்ளிவாசலிலிருந்து வெளியே வந்தபோது என் கையில் திருக்குர்ஆன் இருந்தது. அதற்குப் பிறகு எனக்கு முரப்பி ஸாஹிப் அவர்களின் மனைவியோடு நிரந்தரமான தொடர்பு இருந்தது. நான் அவர்களிடம் பல கேள்விகளைக் கேட்டேன். அவர்களுடைய வாராந்திர வகுப்புகளில் கலந்து கொள்ள ஆரம்பித்து விட்டேன். நான் முழு தொழுகையை மனனம் செய்ய வேண்டும்; கற்க வேண்டும் என்று எனக்கு ஓர் இலக்கை நிர்ணயித்துக் கொண்டேன்.

இவ்வாறு இரண்டு மாதங்கள் கழிந்து விட்டன. நான் ஒவ்வொரு நாளும் நிற்கும் போதும், அமரும்போதும் இஸ்லாம் தொடர்பாக சிந்தித்து வந்தேன். ஒருநாள் என் கணவர் என்னைப் பள்ளிவாசலிலிருந்து அழைத்துச் செல்ல வந்திருந்தார். திரும்பிச் செல்லும் பொழுது, இன்று நான் இன்ன இன்ன விஷயங்களைக் கற்றுக் கொண்டேன் என்று அவருக்கு கூறிக் கொண்டிருந்தேன். அப்பொழுது கணவர் என்னிடம், நீர் ஏன் முஸ்லிமாக ஆவதில்லை? என்று கேட்டார்.

இதைக் கேட்டு நான் முற்றிலும் மௌனமாகி விட்டேன். என்னுடைய கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. ஏனெனில், அந்த நேரத்தில் நான் என் வாழ்வில் முஸ்லிமாகி விடவேண்டும் என்று மட்டுமே விரும்பிக் கொண்டிருந்தேன். ஆனால், எனக்கு இது மிகப் பெரிய தீர்மானமாக இருந்தது. எவ்வாறு இருப்பினும், அதற்குப் பிறகு நான் அஹ்மதி முஸ்லிமாக ஆவதாகத் தீர்மானித்தேன். நான் ஜமாஅத்தைப் பற்றி மேற்கொண்டு தகவல்களைப் பெற்றேன். ஆரய்ச்சி செய்தேன். கேள்விகளைக் கேட்டேன்.

காலத்தின் கலீஃபா அவர்களின் குத்பாக்களை முறையாக கேட்டேன். பிறகு, நான் சரியான வழியில் இருக்கின்றேன் என்று எனக்கு உறுதியாகிவிட்டது. எங்களிடம் நேர்வழி இருக்கிறது. எங்களிடம் ஓர் இமாம் இருக்கின்றார். அவர் எங்கள் மீது அக்கறை கொள்கிறார். எங்களுக்கு வழிகாட்டுகிறார். எங்களுக்காக துஆக்கள் செய்கின்றார். நான் இன்னும் அதிகம் கற்க வேண்டி இருக்கிறதுதான்; ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பாக என் உள்ளம் திருப்தி அடைந்து விட்டது.

இந்தப் பெண்மணியின் பைஅத்துக்கு சில மாதங்களுக்குப் பிறகு இவர்களின் கணவரும் பைஅத்

செய்துவிட்டார். இப்பொழுது இவர்கள் அங்கு பேராகோயே ஜமாஅத்தின் மிகவும் தூய மற்றும் சுறுசுறுப்பான உறுப்பினராக இருக்கின்றார்கள்.

பிறகு, கோங்கோ கன்ஸாஷா என்ற ஓர் இடம் இருக்கின்றது. அங்கு மக்காவோ என்ற ஒரு நகரம் இருக்கிறது. அதற்கு அருகிலேயே ஒரு சிறிய இடம் இருக்கிறது. நகரம் அல்லது கிராமம். அங்கு அஹ்மத் பட்டாலூ ஸாஹிப் என்ற ஒரு நபர் இருக்கிறார். அவர் தமது குடும்ப உறுப்பினர்கள் எட்டு பேருடன் சேர்ந்து பைஅத் செய்தார். இன்னும் கூறுவதாயின் அதற்குப் பிறகு அவர் தப்லீஃகும் செய்ய ஆரம்பித்துவிட்டார். அவர் செய்த தப்லீஃகின் விளைவால் மேலும் 62 பேர் ஜமாஅத்தில் இணைந்தார்கள்.

அந்தத் தோழர் கூறுகிறார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்ததற்கான மிகப் பெரிய காரணம் காலத்தின் கலீஃபாவின் இருப்பும் கிலாஃபத் அமைப்பும் ஆகும்.

அமீர் ஸாஹிப் கூறுகிறார்கள்: நான் அவருக்கு ஆன்லைனில் திருக்குர்ஆன் ஓதி கொடுக்கின்றேன். அவர் கூறுகின்றார்:

அவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதற்கு முன்னால் சன்னி முஸ்லிமாக இருந்தார். ஆனால், அந்த வருடங்களில் தன்னிடம் இவ்வாறு கேள்விகள் கேட்டு வந்தார்; ஏன் சன்னி முஸ்லிம்கள் வெறுப்பை பரப்புகின்றார்கள்? இரண்டாவது ஏன் அவர்களிடம் இவ்வளவு கருத்து வேறுபாடு இருக்கிறது? இவர்கள் உண்மையில் நிலைபெற்றிருக்கிறார்கள் என்றால், இவர்கள் பின்பற்றக் கூடிய ஓர் இமாம் ஏன் இவர்களுக்கு இல்லை?

இந்த மனப் போராட்டங்களுக்கு இடையில் mta-வில் காலத்தின் கலீஃபா அவர்களின் குத்பாக்களுடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. எனக்குள் ஓர் ஓசை கூறியது; மிர்ஸா குலாம் அஹ்மத், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் உண்மையாளர் ஆவார்கள். ஆனால், எல்லா முஸ்லிம்களும் ஏன் அஹ்மதிகளைக் காஃபிர் என்று கூறுகிறார்கள்? என்று இரண்டாவது ஓசை கூறி வந்தது.

இறுதியாக, தன்ஸானியாவில் ஓர் அஹ்மதி சகோதரரோடு எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. பிறகு, ஃபிரான்ஸில் ஓர் அஹ்மதி நண்பரோடு தொடர்பு ஏற்பட்டது. கடைசியில் அந்தப் பகுதியின் முபல்லிஃக் முஸ்ஸம்மில் என்பவருடன் அன்னாருக்கு தொடர்பு ஏற்பட்டது. இந்தத் தோழர்கள் அனைவரும் எனக்கு ஜமாஅத் நூல்களை வாசிப்பதற்காகக் கொடுத்தார்கள். அவற்றைப் படித்ததற்குப் பிறகு ஆய்வு செய்ததற்குப் பிறகு நான் பைஅத் செய்துவிட்டேன். அதற்குப் பிறகு, இவர்கள் அங்கு தமது பகுதியிலும் தப்லீஃக் செய்தார்கள். அங்கும் இவர்களுடைய தப்லீஃகால் ஜமாஅத் அதிகரித்தது.

கோங்கோ கன்ஸாஷா உடைய அமீர் ஸாஹிப் கூறுகிறார்கள்: அங்கு மேதம் வாணீ தய்பூ ஸாஹிபா இருக்கின்றார்கள். இவர்கள் உவேரா ஜமாஅத்தைச் சேர்ந்தவர் ஆவார்கள். 82 வயதாகிறது. அன்னார் கூறுகின்றார்கள்: நான் முஸ்லிமாக இருந்தேன். ஆனால், 42 வயதில் கிறித்தவர் ஆகியிருந்தேன். ஏனெனில், என் மகன் ஒரு தேவாலயத்தில் பாதிரியாக இருந்தான். ஒருநாள் ரேடியோவில் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஒரு குத்பாவின் ஃபிரஞ்சு மொழியாக்கத்தை நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

அதைக் கேட்டதுமே அவர்கள் மிஷன் ஹவுஸுக்கு ஃபோன் செய்து, நான் காலத்தின் இமாமிடம் பைஅத் செய்ய விரும்புகின்றேன் என்று கூறினார்கள். மேலும் நான் மரணிக்கும்பொழுது என் ஜனாஸாவை அஹ்மதிய்யா ஜமாஅத் தொழ வைக்கட்டும் என்று தன் மகனிடம் கூறினார்கள்.

கேமரூனில் முபல்லிஃக் இன்சார்ஜ் கூறுகிறார்கள்: அங்கு மர்வாவில் இருந்து உமர் ஸுபைர் ஸாஹிப் என்ற ஒரு தோழர் 2022 ஆம் ஆண்டு கேமரூன் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தார். அவர் தான் அஹ்மதி ஆன விவரங்களை முஅல்லிம் ஸாஹிப் அவர்களுக்குக் கூறினார்.

உமர் ஸாஹிப் கூறினார்கள்: mta ஆஃப்ரிக்காவின் மூலமாக எனக்கு ஜமாஅத்தைப் பற்றி அறிமுகம் கிடைத்தது. நான் மிகவும் ஆர்வத்துடன் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஜுமுஆ குத்பாக்களைக் கேட்டு வந்தேன். ஒவ்வொரு குத்பாவின் மூலமும் எனக்கு ஜமாஅத்துடன் தொடர்பு அதிகரித்துக் கொண்டே சென்றது. என் அறிவும் வளர்ந்து கொண்டே சென்றது.

நவம்பர் 2021 முதல் குத்பாவில் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தஹ்ரீகே ஜதீத் உடைய சம்பவங்கள் மற்றும் தியாகங்களை எடுத்துக் கூறினார்கள். அப்பொழுது எங்கு மக்கள் இந்த அளவு இஸ்லாத்திற்காக தியாகம் செய்கிறார்களோ இந்த ஜமாஅத் இறைவன் தரப்பில் இருந்து வந்திருக்கிறது என்பதை இறைவன் எனக்கு வெளிப்படுத்தி விட்டான். இந்த விஷயத்தால் என் உள்ளத்திற்கு முழு திருப்தி கிடைத்து விட்டது. நான் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டேன். இதற்குப் பிறகு நான் மிகவும் மனநிறைவும் மகிழ்ச்சியும் பெற்றுள்ளேன்.

ஸிராலியோன் வாட்டர்லோவின் அங்குள்ள முரப்பி அல்ஃபா ஸாஹிப் கூறுகிறார்கள்: கடந்த ஆண்டு என் குத்பாவை mtaவின் மூலமாக கேட்பதற்கு அல்ஃபா ஸாஹிப் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. தம் குடும்பத்துடன் குத்பா கேட்க வந்தார்கள். குத்பாவைக் கேட்டு மிகவும் தாக்கத்திற்குள்ளானார்கள். 8 உறுப்பினர்களைக் கொண்ட முழு குடும்பமும் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டது. இறையருளால் அஹ்மதிய்யத்தில் இணைந்ததற்குப் பிறகு மிகவும் உளத் தூய்மையுடன் ஜமாஅத் தொண்டுளில் பங்கு கொள்கிறார்கள்.

அங்கு பள்ளிவாசல் மறுசீரமைப்புப் பணி நடந்தபோது, இவர்கள் முழு நேரமும் வகாரே அமல் செய்தார்கள். கூலி ஆட்களைப் போன்று பணிபுரிந்தார்கள். இவர்கள் நஃபில் நோன்புகளையும் வைக்கிறார்கள். மக்களுக்கான இஃப்தாருக்கான ஏற்பாட்டையும் செய்து கொடுக்கிறார்கள்.

வங்காள தேசத்தின் அமீர் ஸாஹிப் எழுதுகிறார்கள்; ஜமாஅத்தின் தப்லீஃக் செயலருக்கு இங்கு சொந்தமாக ஓர் அச்சகம் உள்ளது. அதில் பிலால் எனும் பெயரை உடைய ஓர் இளைஞர் பணிபுரிகிறார். அந்த இளைஞருக்கு ஜமாஅத் அறிமுகம் ஆனபோது, அவர் நம் தலைமையக பள்ளிவாயிலுக்கு வர ஆரம்பித்து விட்டார். அங்கு அவருக்கு என்னுடைய சொற்பொழிவுகளைக் கேட்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. சில காலத்திற்குப் பிறகு அவர் பைஅத் செய்துவிட்டார். ஆனால், அவர் மனைவி பைஅத் செய்திருக்கவில்லை.

இவர்களுக்குத் திருமணம் ஆகி 7 ஆண்டுகள் கழிந்து இருந்தன. ஆனால், சந்ததி ஏதும் இருக்கவில்லை. இவர் தன் மனைவியிடம் அல்லாஹ் நமக்கு சந்ததியை தருவதற்காக கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் துஆவுக்காக எழுதுவோம்; மக்கள் எழுதுகிறார்கள். நாமும் எழுதி பார்ப்போம் என்று கூறினார்.

எனவே நாமும் இவ்வாறு துஆவுக்காக விண்ணப்பித்துப் பார்க்கலாம் என்று தன் மனைவியை இதற்கு சம்மதிக்க வைத்து விட்ட பிறகு, அவர்கள் துஆவிற்காக விண்ணப்பித்தார்கள். சில மாதங்களுக்குப் பிறகு இவர்களின் மனைவி கருவுற்றார். இது காலத்தின் கலீஃபா அவர்களின் துஆவால் அல்லாஹ் புரிந்த அருள் என்ற சிந்தனை அவர் மனைவிக்கு ஏற்பட்டது. எனவே அவரும் பைஅத் செய்து விட்டார்.

பெல்ஜியம்-ன் அமீர் ஸாஹிப் கூறுகின்றார்கள்: அங்கு மராக்கஷ் எனும் தோழர் ஒருவர் இருக்கிறார். அவர் ஒரு நீண்ட காலமாக அஹ்மதிய்யத்தைப் பற்றி ஆய்வு செய்த பிறகு பைஅத் செய்தார். அவர் கூறுகிறார்:

நான் குழந்தைப் பருவத்தில் இருந்தே பல அறிஞர்களுடன் நேரத்தைக் கழித்து இருக்கின்றேன். ஆனால், கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் குத்பாக்கள் திருக்குர்ஆனுக்கு விளக்கவுரையாக மட்டுமே அல்ல. அதற்கும் மேற்பட்டு மனிதனை அல்லாஹ்வுக்கு அருகில் கொண்டு செல்கின்றன. இந்தக் குத்பாக்களைக் கேட்ட பிறகு எனக்குத் தொழுகைகளில் இன்பம் ஏற்பட ஆரம்பித்துவிட்டது.

இறைவன் எனக்கு உண்மையான கனவுகளையும காட்டினான். அஹ்மதிய்யத் என் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டு விட்டது. இவர் இந்த விஷயத்தைக் கூறும் பொழுது கண்ணீர் வடிக்க ஆரம்பித்து விட்டார்.

ஸிராலியோனின் முரப்பி கேனாமா கூறுகிறார்கள்: ஓரிடத்தில் 500 -க்கும் மேற்பட்ட அஹ்மதி அல்லாதவர்கள் ஒன்று கூடி இருந்தார்கள். அங்கு ஒரு நபர் எழுந்து நின்று, அஹ்மதிகளே இஸ்லாத்தின் உண்மையான வழியில் இருக்கிறார்கள். நாம் அவர்களை வெறுக்கின்றோம். ஏனெனில், அவர்கள் எப்பொழுதும் உண்மையைக் கூறுகிறார்கள். ஒன்று வெள்ளையாக இருக்கிறது என்றால், அவர்கள் அதை வெள்ளை என்றே கூறுகிறார்கள். ஆனால், ஒன்று கருப்பாக இருந்தால் நாம் அதை வெள்ளை என்று கூறுகின்றோம். இதன் காரணமாகவே நம்மிடம் தூய்மையும், ஒற்றுமையும் இல்லை என்று கூறினார்.

அதே பகுதியின் ஓர் இமாம் ஸாஹிபும் எழுந்தார். அவர் கூறினார்: நீங்கள் அஹ்மதிகளின் கலீஃபாவின் குத்பாக்களைக் கேட்டால் உங்களுக்கு இஸ்லாத்தின் சரியான போதனைகளைப் பற்றி தெரிந்து விடும். நான் அஹ்மதிய்யத்தை ஏற்கவில்லைதான்; ஆனால், ஒவ்வொரு ஜுமுஆ நாளிலும் நான் அவர்களின் கலீஃபாவின் குத்பாவைக் கேட்கிறேன். நீங்கள் கேட்டால் உங்களுக்கு இஸ்லாமிய போதனைகளைப் பற்றி தெரிய வரும். குத்பா முடிவதை உங்கள் உள்ளம் விரும்பாது.

பிறகு, மஷாகா மண்டலத்தின் முபல்லிஃக் கூறுகிறார்கள்: நான் எனது ஒரு வங்கி வேலை சம்பந்தமாக, பேங்குக்கு சென்றிருந்தேன். வேலை முடிந்ததும் பசி எடுத்தது. அப்பொழுது ஒரு ஹோட்டலுக்கு சாப்பிடுவதற்காக சென்று விட்டேன். அங்கு பார்த்தபோது ஹோட்டலில் வைக்கப்பட்டிருந்த டிவியில் mtaவின் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன.

அந்த மக்கள் பதிவு செய்யப்பட்டிருந்த எனது குத்பாவைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்த நிர்வாகத்திடம் நான் கேட்டபோது அவர்கள் நாங்கள் பெரும்பாலும் இந்தச் சேனலை பார்க்கின்றோம். இந்தச் சேனலில் மிக நல்ல நல்ல விஷயங்கள் கூறப்படுகின்றன. அவை எங்களுக்குப் பலனளிக்கக் கூடியவையாக இருக்கின்றன. மேலும், எங்களுக்கு இந்தச் சேனலை பார்ப்பது நன்றாக இருக்கிறது என்று கூறினார்கள்.

ஆக, இவ்வாறும் அல்லாஹ் ஜமாஅத்தின் தப்லீஃகிற்கும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றான். அந்நியர்களுக்கு கிலாஃபத்தின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துகிறான். மாலியின் முபல்லிஃக் உமர் முஆஸ் ஸாஹிப் எழுதுகிறார்கள்:

இங்குள்ள கீனீ மண்டலத்தின் ஓர் உறுப்பினர் ஜாலா ஸாஹிப் ஆவார். அவர் கூறினார்: ஒரு விபத்தின் காரணமாக அவருடைய கால் எலும்புகள் உடைந்து விட்டன. அவர் அதற்கான பல சிகிச்சை எடுத்துக் கொண்டார். நாட்டு மருத்துவம் மட்டுமல்லாமல், (ஆங்கில) மருத்துவர்களிடமும் காட்டினார். பல மாதங்கள் கழிந்த பிறகும் கூட எலும்புகள் ஒன்று சேரவில்லை.

இனி அவருடைய எலும்பு ஒன்று சேராது என அவரும் அவர் உறவினர்களும் மிகவும் நிராசையடைந்தார்கள்.

அவர் கூறுகிறார்: ஒருமுறை கனவில், ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவருக்காக துஆ செய்வதைக் கண்டார். அவர் கூறுகிறார்: நான் கனவிலேயே அவர்களின் துஆவில் உடனுக்குடன் ஆமீன் கூறி வந்தேன். இதற்குப் பிறகு நான் சுய நினைவுக்கு வந்தபோது நான் ஆமீன் என்று கூறி என்னுடைய கைகளை என் கால்கள் மீது தடவினேன்.

அவர் கூறுகின்றார்: அதற்குப் பிறகு, அல்லாஹ் என் மீது அருள் புரிந்தான். எலும்புகள் ஒன்று சேரவில்லை என்று ஏற்பட்டிருந்த நிராசை அகன்றது. அது மெது மெதுவாக ஒன்று சேர ஆரம்பித்தது. இப்போது அல்லாஹ்வின் அருளால் நான் முற்றிலும், நலமாக உள்ளேன். என்னுடைய கால் எலும்புகள் உடைந்தன என்றும் எவராலும் கூற இயலாது. எனவே, இந்த வகையிலும் அல்லாஹ் கிலாஃபத்துடன் தொடர்பை உறுதியாக்குவதற்கான ஏற்பாட்டை செய்கின்றான்.

அந்நியர்கள் மீது என்ன தாக்கம் ஏற்படுகின்றது? கோங்கோ கன்ஸாஷாவின் அமீர் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: அல்லாஹ்வின் அருளால் கோங்கோவில் ஜமாஅத்தின் ரேடியோ ஸ்டேஷன் மட்டுமல்லாமல் 23 உள்ளூர் FM ரேடியோக்கள் மூலமாக வாராந்திர தப்லீஃக் நிகழ்ச்சிகள், தப்லீஃக், தர்பிய்யத் நிகழ்ச்சிகள் மற்றும் எனது ஜுமுஆ பேருரை ஆகியவை முறையாக ஒளிபரப்பப்படுகின்றன.

பந்தோநோவின் இரண்டு உள்ளூர் தொலைக்காட்சி நிலையங்களில், குத்பா நேரடியாக ஒளிபரப்பப்படுகிறது. அதற்கான நல்ல Feedback கிடைக்கிறது. உள்ளூர் கிறித்தவ டாக்டர் ஸாஹிப் ஒருவருடன் ஒருநாள் வழியில் சந்திப்பு நிகழ்ந்தது. அப்போது அவர் கூறினார்:

நான் உங்கள் இமாமின் குத்பாவைக் கேட்கிறேன். அவர்கள் மிகவும் தாக்கம் ஏற்படுத்துகிற வகையில் (விஷயங்களை) முன்வைக்கின்றார்கள்.

நீங்கள் உள்ளூர் மொழியிலும் இதை மொழியாக்கம் செய்யுமாறு நான் உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். அதனால் ஏராளமானவர்கள் இதிலிருந்து பயன் பெறுவார்கள்.

ஆக, இந்த வகையிலும் அல்லாஹ் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்கின்றான். காலத்தின் கலீஃபா அவர்களின் குரலை மக்கள் வரை எட்ட வையுங்கள் என்று அந்நியர்கள் இந்த விஷயத்தின் பக்கம் கவனமூட்டுகின்றார்கள். இவ்வாறு நிலம் சமன்படுத்தப்படுகிறது.

ஒரு காலம் வரும். அப்போது அவர்களுடைய உள்ளங்களும் திறக்கும். இன்ஷா அல்லாஹ். அவர்கள் உண்மை இஸ்லாத்தை அடையாளம் கண்டு கொள்வார்கள். எனவே, கிலாஃபத்துடன் எப்போதும் அருட்கள் இருப்பதற்கான வாக்குறுதியை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கியுள்ளான். அது எவ்வளவு விநோதமான முறையில் நிறைவேறுகிறது என்றால், மனிதனின் சிந்தனையால் அதை சூழ முடியாது.

நம்மவர்கள் மற்றும் அந்நியர்களின் இந்த சம்பவங்கள் அல்லாஹ்வின் அடையாளங்கள் அஹ்மதிய்யா கிலாஃபத்துடனான அல்லாஹ்வின் ஆதரவுகள் மற்றும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின்

அடிமைத்துவத்தின் கீழ் தோன்றி உலகை ஒரே சமுதாயமாக ஆக்கவிருந்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு இது சான்று இல்லை என்றால் வேறு என்ன?

அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும்தான் கிலாஃபத் அமைப்பின் கீழ், இன்று முழு உலகிலும் இஸ்லாத்தின் முன்னேற்றம் மற்றும் பிரச்சாரத்திற்கான வேலைகளை செய்கின்றது. பாதகமான சூழ்நிலையிலும் நாம் காணும் இந்த முன்னேற்றங்கள் அல்லாஹ்வின் செயல் ரீதியிலான சாட்சிக்கான சான்றுகளே! இல்லையென்றால், வேறு என்ன?

ஆனால், எவருடைய கண்கள் குருடாக இருக்கின்றனவோ அவருக்குத் தென்படுவதில்லை. தென்படவும் முடியாது. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் அல்லாஹ்வின் முன்னறிவிப்பிற்கேற்ப மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிலிருந்து ஆரம்பமாகும். மேலும் நபித்துவ வழியிலான கிலாஃபத் கியாமத் வரை தொடரும். எப்போதும் நிலைபெற்றிருக்கும். இன்ஷாஅல்லாஹ். எந்த எதிரியும் அதை சிறிதளவும் அசைக்க முடியாது.

எனவே நமது ஈமானை இன்னும் உறுதிப்படுத்துவதற்கும் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் நம்மை இணைத்து வைப்பதற்கும் அதை நிலைநாட்டுவதற்காக எந்த தியாகத்தையும் செய்ய தயங்காமல் இருப்பதற்கும் நாம் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹுத்தஆலா நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!. (ஆமீன்)

தமிழாக்கம் :

மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

## தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)

தவாறான எண்ணங்களுக்கான காரணிகளில் காது மாபெரும் காரணியாகும். பெரும்பாலும் மக்களிடமிருந்து விஷயங்களைக் கேட்ட அளவிலேயே மக்கள் தவறான எண்ணம் கொண்டு விடுகின்றனர். எனவே தான் அதனைக் குறித்து முதலில் கூறப்பட்டுள்ளது. அதன் பிறகு இரண்டாவது மாபெரும் வழிமுறை கண் ஆகும். அதனை இரண்டாவது இடத்தில் எடுத்துரைத்துள்ளான். உச்சபட்ச தவறான எண்ணம் கொள்ளக் கூடியவர் யாராக இருக்கின்றார் என்றால் அவர் புகார்களைக் கேட்பதுமில்லை. சந்தேகத்திற்குரியதை பார்ப்பதுமில்லை. மாறாக, அவர் சுயமே தமது உள்ளத்தில் ஒரு காரணத்தை உருவாக்கிக் கொண்டு மற்றவர்களை பின்தொடர ஆரம்பித்து விடுகின்றார். இந்தக் காரணி மிகக் குறைவாக உள்ளது என்பதாலேயே இதனை எல்லாவற்றையும் விட இறுதியில் வைக்கபட்டுள்ளது. ஏனெனில், அபாயகரமான நோய்கள் சாதாரண நோய்களைக் காட்டிலும் எப்போதும் குறைவாகவே உள்ளன. اِنَّ السَّمۡعَ

என்ற இந்த வாக்கியத்தில் இந்த விஷயமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது, செல்வம் மற்றும் உயிர் ஆகிய விவகாரங்களில் செய்யப்படும் அநீதிகளில் மட்டுமே பிடிக்கப்படுவீர்கள் என்று கருதாதீர்கள். மாறாக, (சக) மனிதனின் கண்ணியத்தின் மீதான தாக்குதல் தொடர்பாகவும் விசாரிக்கப்படும். ஒரு(வரின்) காது மற்றவரைக் குறித்து செவிமடுப்பதற்கு அதிகாரமற்ற ஒரு விஷயத்தை செவிமடுத்தால் அது குறித்து விசாரிக்கப்படும்.எதனைப் பார்ப்பதற்கு ஒரு கண்ணிற்கு உரிமை இல்லையோ அதனை அந்தக் கண் பார்த்தால் பின்னர் அது குறித்தும் அதனிடம் கேள்விக் கேட்கப்படும். எந்த எண்ணங்களை கொள்ளவதற்கு உரிமை இல்லையோ அவற்றை ஓர் உள்ளம் கொண்டிருந்தால் பின்னர் அது குறித்தும் கேள்வி கேட்கப்படும். இது எப்படிப்பட்ட உயர்தரமான தூய்மைக்கான போதனை என்றால், இதன் படி அமல் செய்வதால் எந்த வகையான அசுத்தமும் மனிதனிடத்தில் எஞ்சியிக்க முடியாது. இந்த போதனையில் நல்லொழுக்கம் தொடர்பாக மிகவும் உயர்தரமான போதனை நல்கப்பட்டுள்ளது. மனிதன் யூகங்களைக் தனது தீர்மானங்களின் அடித்தளமாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. மாறாக, அறிவின் மீது (தீர்மானங்களின் அடித்தளத்தை) அமைத்துக் கொள்ள வேண்டும். வெறும் காதின் சாட்சியம் அல்லது கண்ணின் சாட்சியம் அல்லது உள்ளத்தின் சாட்சியம் போதுமானதல்ல. மாறாக, எல்லா வழிமுறைகளின் மூலமும் ஆய்வு செய்து கொண்டு பின்னர் முடிவெடுக்க வேண்டும்.

ஹஸ்ரத் இமாம் அபூஹனீஃபா (ரஹி) அவர்களின் ஒரு கூற்று இதுவாகும். அதாவது, ஒருவரிடத்தில் நிராகரிப்பிற்கான 99 காரணங்கள் இருந்து, ஈமானிற்கான ஒரு காரணம்( மட்டுமே) இருந்தாலும் கூட அவரை காஃபிர் என்று கூறாதீர்கள். இந்த நுட்பம் நிறைந்த வழிகாட்டலின் பொருள் இதுவே ஆகும். அதாவது, ஒருவரது நிராகரிப்பிற்கு 99 சான்றுகளும், அவரது ஈமானிற்கு ஒரு சான்று மட்டுமே இருந்தாலும் அவரை காஃபிர் (நிராகரிப்பாளர்) என்று கூறாதீர்கள். அதற்காக நிராகரிப்பிற்கு ஷரீஅத்தின் அடிப்படையில் 99 காரணங்கள் இருந்தாலும் அப்போதும் அவரை காஃபிர் என்று கூறக்கூடாது என சில முட்டாள்கள் கருதுவது போன்ற பொருள் இதற்கு ஒருபோதும் கிடையாது. நிராகிப்பிற்கான காரணிகள் இருப்பதே எழு, எட்டு காரணிகள் தான். அல்லாஹ்வை நிராகரிப்பது, வானவர்களை நிராகரிப்பது, இறை வேதங்களை நிராகரிப்பது, நபிமார்களை நிராகரிப்பது, துஆவை நிராகரிப்பது, இறை நியதியை மறுப்பது, மரணத்திற்கு பிறகான உலகை (மறுமையை) நிராகரிப்பது போன்றவை ஆகும். ஆக, நிராகரிப்பிற்கான 99 காரணங்கள் இருந்த பிறகும் காஃபிர் எனக் கூறக்கூடாது என்று இதற்கு பொருள் எடுத்துக் கொண்டால் பின்னர், ஒரு நாத்தீகரைக் கூட காஃபிர் என்று கூறமுடியாது.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4-பக்கம் 334 காதியான்)


**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

**உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.**

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

**KHAIRUL-ISLAM**

**JAYGON-WEST BENGAL 97348 44732**


## குத்பா பேருரை... (12ம் பக்க தொடர்ச்சி)

சுயமரியாதைக்கான கேள்வியாக ஆக்கிக் கொண்டார் என்ற சந்தேகம் ஏற்படும் அளவிலான நடைமுறையை மேற்கொள்ளக் கூடாது. குறிப்பாக பட்ஜெட் தொடர்பான விவாதம் நடைபெறும்போது அதிகமான உணர்ச்சிகள் வெளிப்பட்டுவிடுகின்றன. மேலும் சில சந்தேகங்களும் வெளிப்படுத்தப்பட்டுவிடுகின்றன. அதுபோன்ற நிலைமைகளிலும் சம்பந்தப்பட்ட செயலாளர், அதாவது மால் செயலரும், கூட்டத்தின் தலைவரும் பொறுமையுடன் விஷயத்தைக் கேட்டு விட்டு அதற்கு பதிலளிக்க வேண்டும். மேலும், எவ்வாறு பட்ஜெட் உருவாக்கப்பட்டது? வருமானம் எந்த அளவிற்கு உள்ளது? அதன் செலவினங்கள் எவ்வகையில் உள்ளன? என்பதை திருப்தியளிக்கும் வகையில் விளக்க வேண்டும். பேசக் கூடியவர் தம் தரப்பிலிருந்து ஜமாஅத்தின் நலனைக் கருத்தில் கொண்டு பேசுகின்றார். எனவே தப்பெண்ணம் கொள்ளக் கூடாது. அதேபோன்று அஜென்டாக்களின் மற்ற ஆலோசனைகள் இருக்கின்றன. அதிலும் சிலமுறை தேவையற்ற விவாதத்தில் நிர்வாகமும், பிரதிநிதிகளும் ஈடுபட்டு விடுகின்றனர் அல்லது நிர்வாகத்திற்கு பயந்தவாறு முற்றிலும் இவ்வாறு மௌனமாகி விடுகின்றனர். அதுபோன்ற மக்களும் தங்களது அமானிதத்திற்கான உரிமையை செலுத்தவில்லை.

எனவே எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். பிரதிநித்துவம் மற்றும் அமானிதத்தின் உரிமையை பிரதிநிதிகள் செலுத்த வேண்டும் என்பதற்காகத் தான் மக்கள் அவர்களைத் தேர்ந்தெடுத்தனர். எனவே சுயத்திற்கான கேள்வியும் எழக் கூடாது; எவ்வகையான அச்சமும் இருக்கக் கூடாது. இதனை எப்போதும் புரிந்து கொள்ளுங்கள். அதாவது تُؤَدُّوا الۡاَمٰنٰتِ اِلٰۤى اَهۡلِهَا

(4:59) என்ற அல்லாஹ்வின் இந்தக் கட்டளைக்கேற்ப மக்கள் நம்மைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்று புரிந்து கொள்ளுங்கள். அதாவது அமானிதங்களை அவற்றிற்கு தகுதியானவர்களிடம் ஒப்படையுங்கள். மேலும், மக்கள் நல்லெண்ணத்துடன் அல்லாஹ்வின் இந்தக் கட்டளைக்கு ஏற்ப தமது பிரநிதிகளை ஆக்கியிருக்கும்போது பின்னர் அதற்கேற்பவே தங்களது அமானிதங்களுக்கான உரிமைகளை அவர்கள் செலுத்துவார்கள் என்றே காலத்தின் கலீஃபாவும் கருதுவார். ஒருவேளை பிரதிநிதிகள் தங்களது இந்த கடமையை ஷூராவிலும் அதன் பின்னரும் நிறைவேற்றாமல் இருக்கின்றனர் என்றால் அவர்கள் ஜமாஅத் உறுப்பினர்களின் நம்பிக்கையை மட்டும் காயப்படுத்தவில்லை. மாறாக, தமது அமானிதங்களுக்கான உரிமையை செலுத்தாததன் காரணமாக காலத்தின் கலீஃபாவிற்கு நம்பிக்கை துரோகம் செய்யக் கூடியவர்களாக இருக்கின்றனர். ஆனால், இங்கு மற்றொரு நிலையும் இருக்க முடியும். உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடிய சிலர் இறையச்சத்தின் படி செயல்படாமல் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்திருக்கலாம்; உறவுகளின் தொடர்பின் காரணமாக அல்லது நட்புகளைக் கருத்தில் கொண்டவாறு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்திருக்கலாம்.

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...

தமிழாக்கம் :

மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

# ஜுமுஆ பேருரை

**மஜ்லிஸே ஷூராவின் முக்கியத்துவம் மற்றும் அதன் உறுப்பினர்களின் பொறுப்புகளைக் குறித்த ஆழிய ஞானம் நிறைந்த பேருரை**

**மஜ்லிஸே ஷூரா என்பது ஆலோசனை வழங்கக் கூடிய சபை ஆகும். அது தீர்ப்பு வழங்கக் கூடியது அல்ல.**

**ஆலோசனை கொடுக்கக் கூடியவர்கள் எப்போதும் இதனை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது அவர்களின் ஆலோசனைகள் நல்லெண்ணம் மற்றும் இறையச்சத்தின் உயர் தரத்திற்கு ஏற்ப அமைந்திருக்க வேண்டும்**

**உங்களது செயல் முன்மாதிரி, மக்களிடத்தில் நேசம் மிகு தொடர்பு, அவர்களைக் குறித்த வேதனையை உள்ளத்தில் கொள்வது, அவர்களுக்காகவும், தமக்காகவும் துஆ செய்வது, காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுதலின் தரத்தை உயர்த்துவது போன்றவை ஒவ்வொரு பொறுப்பாளர் மற்றும் மஜ்லிஸே ஷூராவின் ஒவ்வொரு உறுப்பினருடைய சிறப்பான தனித்தன்மையாக ஆகிவிட்டால் பின்னர் அந்நிலையில்தான் ஒட்டுமொத்த ரீதியில் ஜமாஅத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றம் உருவாகுவதை நம்மால் காண முடியும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 12 மே 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **12ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

அடுத்து, மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த பிறகு, முஸ்லிம்களின் அமைதியையும், பாதுகாப்பையும் அழிப்பதற்கு மக்கத்து காஃபிர்கள் முயற்சி செய்தனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை முறியடிப்பதற்காக ஸஹாபிகளிடம் ஆலோசனை செய்தார்கள். மேலும், அன்ஸார் சகோதரர்களின் தலைவர்களையும் அதில் இணைத்துக் கொண்டார்கள். முஹாஜிர்களின் தலைவர்களையும் அதில் இணைத்துக் கொண்டார்கள். பின்னர், முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் ஸஹாபிகளின் தலைவர்களின் ஆலோசனைகளுடனும், சம்மதத்துடனும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் மைதானத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். மேலும், இந்த ஆலோசனையின்போது, அன்ஸார் கோத்திரத்தின் தலைவர்கள் காட்டிய தூய்மை மற்றும் நன்றியுணர்விற்கான முன்னுதாரணம் மேலும், செய்த உடன்படிக்கை ஆகியவற்றின் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிகமான மகிழ்ச்சியையும், மனநிறைவையும் வெளிப்படுத்தினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம். ஏ (ரலி) அவர்களின் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூல், பக்கம் 354 -355)

எனவே ஆலோசனை வெறும் ஆலோசனை என்ற அளவில் மட்டும் இருக்கவில்லை. மாறாக, ஆலோசனை வழங்கக் கூடியவர்களின் செயல் மற்றும் நடத்தையும் இருந்தது. மேலும், அந்த ஆலோசனையில் அனைவரையும் விட முதலில் சிறப்பாக அமல் செய்வதற்கான வாக்குறுதி இருந்தது.

அமல் செய்வதற்கான வாக்குறுதி இல்லாவிட்டால், மேலும் உண்மையில் அதன்படி அமல் செய்யப்படவில்லையென்றால் பின்னர் ஆலோசனை பயனற்றதாகும். மேலும், பத்ர்(ப் போர்) மைதானத்தில் அந்த ஸஹாபா பெருமக்கள் தூய்மை மற்றும் நன்றியுணர்வை எவ்வாறு செயல்ரீதியில் வெளிப்படுத்தினார்கள் என்பதை நாம் பார்த்தோம். ஆலோசனைக் கொடுத்துவிட்ட பின்னர் தமது உயிரோடு அவர்கள் விளையாடினர். எனவே எங்கெங்கெல்லாம் நமது ஷூராவின் உறுப்பினர்கள் இருக்கின்றனரோ அவர்களும் இதனை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, எங்கு அவர்கள் ஆலோசனைக் கொடுக்கின்றனரோ அங்கு முதன் முதலில் அவர்கள் தங்களை இந்த விஷயத்திற்காக ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது, ஒப்புதலுக்கான தீர்ப்பு கிடைத்த பிறகு நாம் இந்த ஆலோசனைகளின்படி செயல்பட வேண்டும் அல்லது காலத்தின் கலீஃபா என்ன முடிவெடுத்தாலும் முதன்முதலில் நாம் அதன்படி அமல் செய்வதற்கு எல்லா தியாகங்களையும் செய்ய வேண்டும் என்று அவர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**உங்களுடைய செயல் முன்மாதிரிகள் நிலைநாட்டப்படும்போது தான் பின்னர் ஜமாஅத் உறுப்பினர்களும் மகிழ்ச்சியுடன் அதன்படி அமல் செய்வற்கும் எல்லா தியாகங்களுக்கும் தங்களை தாங்களே முன்னிறுத்துவார்கள்.**

ஷூராவின் உறுப்பினர்கள் எப்போதும் இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது, ஒவ்வொரு அஹ்மதியும் கிலாஃபத்துடன் நன்றியுணர்வு மற்றும் கட்டுப்படுதலுக்கான வாக்குறுதி செய்துள்ளார். எனவே அதற்காக அனைவரையும் விட உயர்தரமான முன்மாதிரியை பொறுப்பாளர்கள் மற்றும் ஷூராவின் உறுப்பினர்கள் காட்ட வேண்டும். ஏனெனில், கிலாஃபத் அமைப்பு மற்றும் ஜமாஅத் அமைப்பின் உதவிகரமான அமைப்பாக இருக்கும் அந்த அமைப்பின் உறுப்பினர்களாக நீங்கள் ஆக்கப்பட்டுள்ளீர்கள்.

எப்போதும் நினைவிற் கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்தின் படி செயல்பட்டவாறு மார்க்கப் பணிகளில் சமுதாயத்தின் மக்களுடன் ஆலோசனை செய்யுங்கள் என்று காலத்தின் கலீஃபாவிற்கு கட்டளை இருப்பதைப் போன்று மென்மையான உள்ளம் கொண்டவராக இருப்பதற்கும், துஆவிற்கும் கட்டளை உள்ளது. நீங்கள் நல்லெண்ணம் கொண்டவர்களாக, இறையச்சத்தின் வழி நடந்து ஆலோசனை வழங்குங்கள் என்று எவர்களிடம் ஆலோசனை செய்யப்படுகின்றதோ அவர்களுக்கும் இந்தக் கட்டளை உள்ளது. எனவே, ஆலோசனைக் கூறக்கூடியவர்கள் எப்போதும் இதனை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, நல்லெண்ணம் மற்றும் இறையச்சத்தின் உயர்படித்தரங்களுக்கு ஏற்ப அவர்களின் ஆலோசனை இருக்க வேண்டும்.

எனவே இந்த அடிப்படையில் ஆலோசனைக் கூறக் கூடியவர்களின் பெரும் பொறுப்பு உள்ளது. அதாவது தங்களின் இறையச்சத்தின் தரம் எந்த தரத்தில் உள்ளது? என்று அவர்கள் தங்களை ஆய்வு செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு இந்த அளவிற்கு இதனை விவரிக்கின்றது. அன்னார் (ரலி) கூறினார்கள்:

شَاوِرُوْا الْفُقَهَاءَ وَالْعَابِدِيْنَ

(கன்ஸுல் உம்மால், தொகுதி 3, பக்கம் 411, ஹதீஸ் 7191, பதிப்பு - பெய்ரூத்)

அதாவது, ஞானம் படைத்த மற்றும் இறை வணக்கம் செய்கின்ற மக்களுடன் ஆலோசனை செய்யுங்கள்; எல்லாருடனும் (ஆலோசனை) செய்யாதீர். ஆக, இது (ஷூரா) பிரதிநிதிகளின் தரம் ஆகும்.

**இதில் ஷூராவிற்காக பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்ற மக்களுக்கும் அறிவுரை உள்ளது. அதாவது அவர்கள் வெளிப்படையில் ஆலோசனைக் கூறும் தகுதி படைத்தவர்களாக இருக்கின்ற, மார்க்க அறிவில் சிறந்த மற்றும் இறை வணக்கங்களிலும் சிறந்த தரம் படைத்த மக்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.**

எங்கெல்லாம் இந்த தரத்தை கருத்தில் கொண்டு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்களோ, அந்த பிரதிநிதிகளின் ஆலோசனைகளில் ஒரு தெளிவான வித்தியாசம் தென்படுவதை நான் கண்டுள்ளேன்.

இந்தப் பொறுப்பு அந்த பிரதிநிதிகளுக்கும் உள்ளது. அதாவது நல்லெண்ணம் கொண்டவாறு ஜமாஅத் உறுப்பினர்கள் ஒருவரை ஷூராவின் உறுப்பினராக தேர்ந்தெடுத்துள்ளனர் என்றால், அவர் அந்த நல்லெண்ணத்திற்கேற்ப முழுமையாக நடந்து கொள்ள வேண்டும். ஒரு நாளில் அல்லது சில வாரங்களில் எவரும் அறிவின் உயர் தரங்களையும், மார்க்கத்தின் ஆழத்தையும் அறிந்து கொள்ள முடியாது; அந்த தரங்களை அடையவும் முடியாது. ஆயினும் இறையச்சத்தின் படி செயல்பட்டவாறு எல்லா வகையான சுய நலனிற்கும் அப்பாற்பட்டு ஒவ்வொருவராலும் தமது ஆலோசனையை வழங்க முடியும். அதேபோன்று அல்லாஹ்வின் முன்பு குனிந்தவாறு அவனிடத்தில் உதவி தேடியவாறு துஆக்களுடன் எங்கெங்கல்லாம் ஷூரா சபைகள் நடத்தப்படுகின்றனவோ அங்குள்ள பிரதிநிதிகள் தமது ஆலோசனையைக் கூற வேண்டுமே தவிர ஒரு சொற்பொழிவாளரின் சொற்பொழிவின் தாக்கத்திற்கு ஆளாகியும் ஆலோசனைக் கூறக் கூடாது. எந்த ஒரு தொடர்பின் தாக்கத்திற்கு ஆளாகியும் கூறக் கூடாது. மேலும், நட்பைக் கருத்தில் கொண்டவாறு தமது கருத்தை மற்றவர்களின் கருத்துடன் இணைத்துக் கொள்ளவும் கூடாது. மேலும், எந்த ஓர் அச்சம்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 29 June 2023 Issue No. 26

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அல்லது ஒருவருக்கு சாதகமாக திகழவேண்டும் என்ற காரணத்திற்காக தமது கருத்தை மாற்றக் கூடாது. மாறாக இறையச்சத்தை கருத்தில் கொண்டவாறு ஜமாஅத்தின் நலனிற்கு எல்லா விஷயத்திலும் முன்னுரிமை வழங்கியவாறு ஆலோசனை வழங்கும்போதுதான் உண்மையில் அவர்கள் தங்களது பிரதிநிதித்துவத்திற்கான உரிமையை செலுத்தக் கூடியவர்களாக திகழ்வார்கள்.

எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். அல்லாஹ் நமது உள்ளங்களின் நிலைமைகளை அறிகின்றான். மேலும் நமது ஒவ்வொரு செயலையும் பார்த்துக் கொண்டிருக்கின்றான். நான அவனது திருப்தியைக் கருத்தில் கொண்டு பணி செய்யவில்லை என்றால், பின்னர் நான் அல்லாஹ்வின் அதிருப்தியை பெறக்கூடியவனாக ஆகிவிடக் கூடாது என்ற அச்சம் இருக்க வேண்டும். அதேபோன்று எந்த நாட்டில் ஷூரா நடைபெற்றுவிட்டதோ அங்கு ஷூராவின் உறுப்பினர்கள் தங்களது உரிமையை இனி இவ்வாறு நிறைவேற்றுங்கள். அதாவது, உங்களது ஆன்மிகம் மற்றும் செயல் நிலையைக் கருத்தில் கொண்டவாறு உங்களது செயல் ரீதியிலான முன்னுதாரணத்தை எப்போதும் வெளிப்படுத்துவதற்கு உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். மேலும், என்ன தீர்ப்பு வந்தாலும் அல்லது எடுக்கப்பட்டிருந்தாலும் இறையச்சத்தின்படி அவற்றில் அமல் செய்வதற்கும், அமல் செய்ய வைப்பதற்கும் முயற்சிகள் செய்யுங்கள்.

நாம் இந்த நிலையை உருவாக்கும்போதுதான் நாம் அல்லாஹ்வின் கருணையை ஈர்க்கக் கூடியவர்களாவும் இருப்போம். மேலும், நமது தீர்மானங்களில் அருட்களும் உருவாகும். இல்லையென்றால் நாம் ஒன்றாக கூடுவதும் மேலும், தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக அழுத்தம் மிகு சொற்பொழிவுகளை ஆற்றுவதும் இறையச்சத்திலிருந்து வெறுமையாக திகழ்கின்ற, மேலும் சிலநேரத்தில் ஒழுக்கங்களையும் சீர்கெடுக்கக் கூடிய முடிவுகளை எடுக்கும் அந்த நாடாளுமன்றங்களைப் போன்றதாக இருக்கும். மேலும் அவை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு எதிரானதாக இருக்கின்றன. தமது கட்சியின் நோக்கத்தைக் கருத்தில் கொண்டதாக அவர்களின் தீர்மானங்கள் அமைகின்றன. சிலநேரங்களில் விரைவாகவே அதுபோன்ற தவறான தீர்மானங்களின் விளைவுகளும் வெளிப்பட்டு விடுகின்றன. அவை அமைதி மற்றும் ஒழுங்கை சீர்குலைக்கக் கூடியவையாக இருக்கின்றன. மேலும், சிலநேரங்களில் தாமதமாகவும் அவற்றின் விளைவுகள் வெளிப்படுகின்றன. ஆனால், எவ்வாறு இருப்பினும், அல்லாஹ்வின் சட்டம் மற்றும் கட்டளைகளைக்கு எதிராக இருந்தால் பின்னர் இறுதியில் அவை சமுதாயங்களின் நாசத்திற்கு வழிமுறையாக ஆகிவிடுகின்றன.

எனவே உலகவாதிகளின் நிலைமைகளைப் பார்த்த பிறகாவது நாம் நமது நிலைமைகளை சிறந்ததாக்கிக் கொள்வதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

நான் கூறியது போன்று ஷூரா உறுப்பினர்களின் ஆலோசனைகள் காலத்தின் கலீஃபாவின் முன் வைக்கப்படுகின்றன. மேலும் காலத்தின் கலீஃபா கூறியதன் அடிப்படையிலேயே இந்த ஷூரா சபை அழைக்கப்படுகின்றது. **எனவே எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது மஜ்லிஸே ஷூரா என்பது கிலாஃபத்தின் உதவிகரமான துறையாகும். மேலும் இந்த அடிப்படையில் ஜமாஅத்தில் கிலாஃபத்திற்குப் பிறகு அதற்கு மிகுந்த முக்கியத்துவம் உள்ளது.** மேலும், ஷூராவிற்காக தேர்ந்தெடுக்கப்படக் கூடிய ஒவ்வோர் உறுப்பினரும் ஓர் ஆண்டு உறுப்பினராக இருக்கின்றார். அவர் தனது இந்த முக்கியத்துவத்தை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். ஷூராவின் அஜெண்டா மற்றும் ஷூராவின் ஆலோசனைகளின் மூலமாகவே காலத்தின் கலீஃபாவிற்கு பல்வேறு நாடுகளிலுள்ள அந்த விவகாரங்களைப் பற்றியும் தெரிய வருகின்றது. பின்னர் வழங்கப்படுகின்ற அந்த கருத்துகளின் அடிப்படையில் அந்த விவகாரங்களுக்குரிய தீர்விற்கான செயல் திட்டமும் முன்னால் வருகின்றது. சிலநேரங்களில் சில விஷயங்கள் ஒரு விவகாரத்தின் தீர்வு தொடர்பாக முழு விளக்கத்துடன் எடுத்துரைக்கப்படுவதில்லை அல்லது ஷூரா உறுப்பினர்களுக்கு முன்னாலேயே கொண்டு வரப்படுவதில்லை. அந்நிலையில் கலீஃபாக்கள் அந்த விஷயங்களையும் கூட செயல் திட்டங்களில் இணைத்து விடுகின்றனர். மேலும் சில இடத்தில் இதே நடைமுறையை நான் மேற்கொள்கின்றேன்.

எனவே எவ்வாறு இருப்பினும், இதற்கு ஒரு சிறப்பான முக்கியத்துவம் உள்ளது என்ற விஷயத்திற்கான முழுமையான புரிதல் ஷூராவின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் இருக்க வேண்டும். மேலும் இந்த முக்கியத்துவம் என்பது வெறும் மூன்று நாட்களுக்கு மட்டுமானதல்ல. மாறாக, ஆண்டு முழுவதற்குமானதாகும். மேலும் என்ன செயல் திட்டம் வகுக்கப்படுகின்றதோ அதன்படி அமல் செய்ய வைப்பதற்கும், நிர்வாகத்திற்கு அதன்படி செயல்படுவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதற்கும் ஒவ்வோர் உறுப்பினரும் முயற்சி செய்ய வேண்டும். இது அவரது பொறுப்பாகும். இந்த நிலை இருக்கும்போதுதான் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் சரியான வழியில் நடைபெறக்கூடியதாக இருக்கும். மேலும் அவற்றின் படி அழகிய முறையில் அமல் செய்யப்பட முடியும். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நேர்வழிக்கான பணியில் நாம் ஒத்துழைப்பு வழங்கக் கூடியவர்களாகவும், உதவியாளர்களாகவும் ஆகமுடியும். இந்த நிலை இல்லை என்றால் பின்னர் ஷூராவின் உறுப்பினராக இருப்பது பயனற்றது ஆகும்.

இங்கு நான் இதனையும் குறிப்பிட்டு விடுகின்றேன். அதாவது, உலகின் ஒவ்வொரு நாட்டிலும் பொதுவாக ஷூராக் கூட்டங்கள் அங்குள்ள அமீரின் தலைமையில் நடைபெறுகின்றன. மேலும் சிலமுறை ஆலோசனைக் கூறக் கூடியவர்கள் சொற்பொழிவின் உற்சாகத்தால் ஷூராவின் புனிதத்தன்மைக்கு எதிரான சில சொற்களை பயன்படுத்தி விடுகின்றனர்.

எனவே முதல் விஷயம் என்னவென்றால், உறுப்பினர்கள் தங்களது கருத்துகளை எப்போது கூறும்போதும் சொற்பொழிவின் உற்சாகத்தைக் காட்டுவதற்கு பகரமாக, தன்நிலை மறந்து சொற்பொழிவு ஆற்றுவதற்கு பகரமாக, மனஉணர்ச்சிகளைக் கொண்ட சொற்பொழிவை ஆற்றுவதற்கு பகரமாக, ஆகுமான சொற்களில் தமது கருத்தைக் கூற வேண்டும்.


சிலமுறை ஆலோசனை வழங்கக் கூடியவர்கள் எப்படிப்பட்ட விஷயங்களைக் கூறிவிடுகின்றனர் என்றால், அதனால் ஆமிலா உறுப்பினர்கள் அல்லது எவருடைய தலைமையில் கூட்டம் நடைபெறுகின்றதோ அதாவது ஜமாஅத் அமீர் போன்றவர்கள், இவ்வாறு கருதுகின்றனர். அதாவது ஆலோசனைக் கூறக்கூடியவர் மறைமுகமாகவோ அல்லது வெளிப்படையாகவோ அல்லது நேரடியாகவோ நமக்கு எதிராக பேசிக் கொண்டிருக்கின்றார் என்று கருதுகின்றனர். பின்னர் கூட்டத்தின் தலைவர் என்ற அடிப்படையில் அவர் பேசக் கூடியவரை கடுமையான சொற்களில் தடுத்து நிறுத்துகின்றார். திட்டிவிடுகின்றார். எனவே அமீர்மார்களும் பொறுமையை வெளிப்படுத்த வேண்டும். மேலும், பேசக் கூடியவர் ஜமாஅத்தின் நலனிற்காகவும், வேதனை கொண்டவாறும் பேசிக் கொண்டிருக்கின்றார் என்று அவர்கள் நல்லெண்ணம் கொள்ள வேண்டும்.

ஒருவேளை அவர் கடும் சொற்களை பயன்படுத்தினால் அல்லது ஷூராவின் புனிதத்திற்கு எதிரான சொற்களை அவர் பயன்படுத்தியிருந்தால் பின்னர் மென்மையுடன் அவரை தடுக்க வேண்டும். மாறாக, கூட்டத்தின் தலைவர் அந்த விஷயத்தை

இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad